அரசியல், சமூக, பொருளாதார இதழ்

# எழுநிலம்

மாத இதழ் | மணம் 16 | செப்டெம்பர் 2022 | திருவள்ளுவர் ஆண்டு 2053



## நெஞ்சம் சுமந்த வலி!

## போதையால் அழிக்கப்படும் தமிழினம்

## கேள்விக் குறியாகும் எதிர்காலம்

# துக்க தினம்..

மாலினி மோகன்



தென்றலின் சாமர வீச்சில்
திங்களின் ஒளி ஒத்தடத்தில்
நட்சத்திர நளினத்தில்
நிலவின் நிழட் பிரதியாய்
ஓர் தேவதை....

அவளின் அழகை
வர்ணிக்க
வார்த்தைகள் இல்லை...
அழகும் அறிவும் அவளின்
இரட்டை செல்வங்கள்...

ஐக்கிய ராச்சியத்தின்
நீண்ட ஆட்சிக்குள்
தன்னை நிரூபித்தவள்....
பொதுநலவாய நாடுகள்
பதினான்கையும்
பொறுப்பேற்றவள்....

அமெரிக்க நாடாளுமன்ற
கூட்டத்தில் பங்கேற்ற
முதல் மகாராணி...
தன்னை பார்க்க பத்து
இலட்சம் மக்களை
ஒரே நேரத்தில்
குவித்தவள்....

இலங்கையிலும்
இருப்பிடம்  கொண்டு
தன் பிறந்த நாளுக்கு
விழா கண்டவள்....
இன்று தன் இறந்த
நாளுக்கும் விழா
காண்பவள்....

மகாராணியே அழகில்
அறிவில் நீங்கள் ஓவியம் தான்...
ஆனால் அதை வைத்து
காவியம் எழுத முடியுமோ?..
எடுத்து சொல்ல  ஏதேனும்
எமக்கு விட்டு வைத்திருக்க
வேண்டும் அல்லவா...

முடிக்குரிய மகாராணியே
உன் நீண்ட
நாள் அரசாட்சியில்
நிலைகுலைந்தது எம்
இலங்கை தேசமும் தான்..
உம்மால் இழக்கப்பட்ட
எல்லாம் இனி
மீண்டும் வருமோ...

இருப்பிடம்
கேட்ட இலங்கையரை
சிறைப்பிடித்து ஆட்சி செய்த
உங்கள் இறையாட்சிக்கு
இன்று துக்க தினம் தான்..

உங்கள் பரம்பரைக்கு
திரட்டிய செல்வங்களில்
காய்ந்து சருகான
எம் பசுமை தேசம்
திரும்பி பார்க்கிறது
இலங்கையில் நீங்கள்
விட்டு சென்ற சுவடுகள்
ஏதும் உண்டா என...

அங்கே மிஞ்சி இருப்பவை
உங்களுக்கு பிறகு
இலங்கைக்கு கிடைத்த
சுதந்திரம் மட்டுமே...

மீண்டும் ஒரு மகாராணி
இலங்கையின் மிச்சம்
வைக்காத உங்கள்
ஆட்சியின்
எச்சங்களை எடுத்து செல்ல
வராத  இந்த நாள் அரச
ஆட்சிக்கே
துக்க தினம் தான்..

மாத இதழ் | மணம்: 16
செப்டெம்பர்
தொடர்புகளுக்கு:-
ezhunilam@yahoo.com
www.ezhunilam.com

## உள்ளடக்கம்...


| | |
|---|---|
| ஆசிரியர் கருத்து... | 03 |
| போதையால் அழிக்கப்படும்... | 06 |
| கஞ்சா விற்று... | 09 |
| கேள்விக்குறியாகும் எதிர்காலம்... | 12 |
| போய் வருகிறேன் (கவிதை).... | 15 |
| வலுக்கும் பலூசிஸ்தான்... | 16 |
| நெஞ்சம் சுமந்த வலி (கவிதை).... | 20 |
| பிள்ளைகளை வெளி.... | 22 |
| படித்ததில் பிடித்தது... | 24 |
| உள்நாட்டுக் கடன்... | 26 |
| வங்கம் தந்த பாடம் .... | 28 |
| வலை. தொடர்: 02... | 31 |
| காலபோகக் கனவு ... | 33 |
| சிவி நாட்டைச் ... | 34 |
| திலீபனின் ஊர்தி ... | 37 |
| திலீபனின் தியாகத்தை ... | 38 |




## திருக்குறள்

**குறள் 119:**

"சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின்"

**விளக்க உரை:**

நேர்மையும் நெஞ்சுறுதியும் ஒருவர்க்கு இருந்தால், அவரது சொல்லில் நீதியும் நியாயமும் இருக்கும். அதற்குப் பெயர்தான் நடு நிலைமை.















கார்த்திகையின் ஏக்கம் கவிதை அருமை. 'இன்னல்கள் இன்னும் தீரவில்லை' கவிதையில் 'இலங்கையில்' என்னும் சொல்லுக்கு பதிலாக தமிழர் நிலம், தேசம் என்று ஏதாவது ஒரு சொல்லை மாற்றீடாக பாவித்திருக்கலாம். 'பஞ்சம் பிழைக்க வந்தவர்கள்' எனும் பதம் எம் மலையக மக்களுக்கு வேண்டாமே! மொத்தத்தில் இந்தக் கவிதை அருமையாக இருந்தாலும் தமிழர் போராட்டத்தில் இருந்து விலகி நிற்கும் ஒருவரால் எழுதப்பட்ட (இந்திய எழுத்தாளர்களின்) கவிதை போல் உள்ளதால் சற்று நெருடலாய் உள்ளது. வாழ்த்துக்கள் 'எழுநிலம்'.

**இனியவன்**
**பிரான்ஸ்**

கவிதைகள் இலங்கையின் உண்மை நிலையின் வெளிப்பாடுகளாக அமைந்திருப்பது சிறப்பு. அரசியல் கட்டுரை களத்தின் யதார்த்தத்தை காட்டுகின்றது. நன்று.

**வாசுகி சுதர்சன்**
**இலங்கை**

அந்நியர் கூட்டம் மாறிமாறி வந்து எங்கள் இடத்தை அபகரிக்கத் துடிப்பதை கட்டுரையில் வாசிக்கும்போது நெஞ்சம் பதைக்கிறது. இதற்காகவா இத்தனை ஆண்டுகாலம் பாடுபட்டோம்? இவ்வளவு பிரச்சனைகளையும் தெரிந்தும் எம்மவர்களிடையே ஒற்றுமை இல்லையே? சஞ்சிகை அருமையாக உள்ளது. இன்னும் அதிகமாக எதிர்பார்க்க வைக்கிறது சஞ்சிகை.

**குணசீலன்**
**குடும்பத்தினர் (சுவிஸ்)**

'வங்கம் தந்த பாடம்' தொடர்ந்து வாசிக்கிறேன். நன்று. ஆக்கங்கள் அவ்வளவும் அருமை - குறிப்பாக ஆசிரியர் தலைப்பும் அரசியல் தொடர்பான கட்டுரைகளும். நன்கு ஆராய்ந்து தெளிந்த நடையில் எழுதுகிறீர்கள். உங்கள் பத்திரிகையின் எழுத்து நடையில் ஒரு கவரும் சக்தி இருப்பதை உங்களின் வெற்றியாக நான் பார்க்கிறேன். மேலும் வளர வாழ்த்துகள்.

**பிரணிதா பிரகலாதன்**
**அமெரிக்கா**

இங்கே பெண்களின் பிரச்சனைகள் மறைமுகமாக அதிகரித்துப் போகிறது. அவற்றை இனங்கண்டு வெளிக்கொணர வேண்டியது உங்கள் பொறுப்பு.

என்னைப் பொறுத்தவரை இங்கு கதைகளை வாசிப்பதில் ஆர்வம் தெரிகிறது. எழுநிலத்தில் வரும் கதைகள் நல்ல கருப்பொருளுடன் வருகின்றன. நல்ல விடயம். இந்தக் கதையும் எதிர்பார்ப்பை தூண்டுகிறது. கவிதைகளில் தெரியும் ஏக்கம் மனதைத் தைக்கிறது.

**அருள்நிலா**
**தாயகம்**

நெடுங்கதை எதிர்பார்ப்பைத் தூண்டுகிறது. என்ன திடீரென்று நெடுங்கதையில் இறங்கி எங்களை சந்தோசத்தில் ஆழ்த்தி விட்டீர்கள்? ஆசிரியர் பக்கம் உண்மையை உரத்துச் சொல்கிறது. வாழ்த்துகள்.

**சுந்தர் தாமோதரன்**
**ஒன்ராறியோ.**




எவ்வளவுதான் எழுதினாலும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துச் செல்வது மன வேதனை தருகிறது. ஆனாலும் மீண்டும் மீண்டும் இடித்துச் சொல்ல வேண்டியுள்ளதே. தயவு செய்து பெண்களுக்கான பக்கங்களை அதிகரியுங்கள்.

**ஆரூரா ருத்ரன்**
**பிரித்தானியா**





**ஆக்கப்பூர்வமான உங்கள் எழுத்தாற்றலை வெளிக் கொணர்வதற்கு அறிய வாய்ப்பு**

அரசியல் கட்டுரைகள், பத்தி கட்டுரைகள்,
சிறுகதைகள் , கலை, கலாசார,
சமூக ஆக்கங்களையும் உங்கள்
படைப்புக்களையும் எமக்கு
அனுப்பி வைக்கலாம்.

ezhunilam@yahoo.com


மலையக மக்களின் பிரச்சனைகள் கொஞ்சம் கொஞ்சமாக வெளிவருவது சிறப்பு. எத்தனையோ பேருக்கு அங்குள்ள மக்களின் அவலம் தெரியாது.

'தன்னம்பிக்கை' கவிதை எனக்குப் பிடித்திருக்கிறது. 'ஏக்கம்' கவிதை உண்மையிலேயே ஏங்க வைக்கிறது.

**பெனடிக்ட் யேசுதாசன்**
**திருமலை**

# எழுமின்! விழிமின்!

## ஆசிரியர் பக்கம்

அரசியற் கொள்ளைகளினாலும், கொள்கையற்ற அரசியலினாலும் இலங்கை வாழ் மக்கள் நடுத்தெருவிற்கு வந்து நீண்ட நாட்களாகி விட்டது. கடந்த ஆகஸ்ட் மாதத்தில், பணவீக்கம் 70.2% ஐத் தாண்டி விட்டதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. உணவுப் பொருட்களின் விலை முன்பிருந்ததைக் காட்டிலும் 84.6 சதம்வரை உயர்ந்துள்ளதாகவும் அவை தெரிவிக்கின்றன.

இலங்கையில் அந்நிய செலாவணி கையிருப்பு இல்லாததால் உணவுப் பொருட்களை இறக்குமதி செய்ய முடியாத நிலை இருப்பதாகவும், உரத் தட்டுப்பட்டினால் விவசாயம் செய்ய முடியாதிருப்பதாகவும், இனி வரும் மாதங்களில் நிலைமை இன்னும் மோசமடையும் என்றும் ஐ.நா. அச்சம் தெரிவித்துள்ளது. இலங்கைக்கான உடனடி உதவியாக, ஆஸ்திரேலியாவிலிருந்து பதினைந்து மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான அரிசியை இலங்கைக்கு அனுப்பியுள்ளது ஐநா.

எவ்வளவு கடன் இருந்தாலென்ன? நாட்டுக்காக என்று எந்த ஒரு அரசியல்வாதியாவது தனது ஒரு நேர உணவையாவது தியாகம் செய்திருக்கிறானா? கடன்களைப் பெற்றுக்கொள்ள என்ற சாக்கில், அரச செலவில் பாரியார் சகிதம் வெளிநாடுகளுக்கு சுற்றுப் பிரயாணம் செய்கிறார் நாட்டின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

ஒரு புறத்தில், தாயகத்தில், தமிழ் மக்களின் இருப்பை மறைமுகமாக மறுதலிக்கும் சிங்கள அரசு, பொது வெளியில், புலம்பெயர் தமிழர்கள் இணைந்து நாட்டைத் தட்டித் தூக்கிவிட வேண்டும் என்ற அழைப்பை விடுக்கிறது. தமிழர்களுடன் நல்லிணக்கத்தில் இருப்பதான ஒரு மாயையை வெளியுலகிற்குக் காட்ட முயல்கிறது.

நாடு திவாலாகும் நிலையிலும், எந்தவொரு தமிழனும் நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் வாழக்கூடாது என்பதிலும், தமிழர்க்கென்று பூர்வீக நிலம் இருக்கக் கூடாது என்பதிலும் கவனமாக இருக்கிறது சிங்களம். அதிகார துஷ்பிரயோகம் செய்த தனது அரசுக்கெதிராக கிளர்ந்த மக்களை, சட்டத்திற்கு புறம்பாக நடந்தார்கள் என்று கைதுசெய்து விசாரணைக்கு உட்படுத்தும் அதே சிங்கள அரசு, தமிழர் பிரதேசத்தில் நீதிமன்றின் ஆணையையும் தூக்கியெறிந்து தமிழர் பூர்வீகப் பிரதேசத்தையும் விளைநிலங்களையும் அபகரிக்கப் பார்க்கிறது.

முல்லைத்தீவு குமுழமுனைப் பிரதேசத்தில் அமைந்துள்ள குருந்தூர் மலையில் இருக்கும் ஆதி சிவனின் ஐயனார் கோவிலை அழித்து, அந்த இடத்தில் இரவோடிரவாக விகாரை கட்டப்படும் வேலைகள் நடைபெற்றதும், அதற்கு முல்லைத்தீவு நீதிமன்றம் தடையுத்தரவு போட்டிருந்ததும் தெரிந்ததே. தடையுத்தரவு மட்டுமல்லாமல், கட்டப்பட்ட விகாரையும் கொண்டுவரப்பட்ட சிலைகளும் உடனடியாக அப்புறப்படுத்தப்படவும் வேண்டும் என்றும் உத்தரவிட்டிருந்தது நீதிமன்று. தடையுத்தரவையும் மீறி மீண்டும் விகாரை கட்டுமானம் நடைபெற்றது மட்டுமல்லாமல், அந்த இடம் உத்தியோகபூர்வமாக பிக்குகளிடம் கையளிக்கப் படுகிறது, விகாரைக்கென தண்ணீரூற்றுப் பிரதேசத்திலிருந்து 632 ஏக்கர் தமிழர்களின் விளைநிலங்கள் சுவீகரிக்கப்படவுள்ளன என்ற செய்திகளைக் கேட்டு கொந்தளித்துப் போயுள்ளனர் தண்ணீரூற்று, குமுழமுனை மக்கள். நியாயம் கேட்டு சனநாயக முறையில் பேரணியாகச் சென்றவர்கள் காவற்துறையால் விரட்டடப்பட்டிருக்கிறார்கள்.

எதிர்ப்புப் போராட்டம் நடத்தியவர்களில் முன்னாள் மாகாணசபை உறுப்பினர், குமுழமுனை கிழக்கு கிராம அபிவிருத்தி மற்றும் காணி அபகரிப்பிற்கு எதிரான தலைவர், மற்றும் ஒரு சமூக ஆர்வலர் ஆகியோர் அடங்குவர். தொல்லியலாளர்களின் வேலைக்கு இடையூறாக பேரணி நடத்தியதாக, கைது செய்யப்பட்ட இவர்கள் மீது நீதிக்குப் புறம்பான முறையில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேலும் கைதுகள் தொடரும் என்றும் எச்சரித்துள்ளது அரச காவற்துறை.

விகாரை கட்டுமானம் நடைபெறவில்லை எனச் சாதிக்கும் தொல்லியல் திணைக்களம், பௌத்த தொல்லியல் பிரதேசத்தை மீள் புனரமைப்பு மட்டுமே செய்துள்ளதாகவும், நீதிமன்றின் உத்தரவின்படி மீள் கட்டுமானம் அகற்றப்பட்டால் தொல்லியல் தடயங்கள் அழிந்துவிடும் என்பதால் அவற்றை அகற்ற முடியாது என்றும் நீதிமன்றின் உத்தரவு மீறப்பட்டதை துணிச்சலாகவும் வெளிப்படையாகவும் கூறுகிறது. மற்றைய மதங்களின் தொல்லியல் பிரதேசங்களைப் பாதுகாக்கும் ஏதாவதொரு நடவடிக்கையையாவது இந்தத் தொல்லியல் திணைக்களம் எடுத்ததாக வரலாறுண்டா? இனப்பரம்பலை மாற்றியமைக்கும் நோக்குடன் நடைபெறும் நில அபகரிப்புக்கு பக்கபலமாக இருந்து துணைபோகும் இந்த பௌத்த தொல்லியல் திணைக்களம் தண்டனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

தவறு செய்பவர்கள் சுதந்திரமாக நடமாட, அதைத் தட்டிக் கேட்பவர்கள் சிறையினுள் தள்ளப்படும் அவலம் இன்னும் எவ்வளவு காலத்திற்குத் தொடரும்? தொடர்ச்சியான தமிழர் நிலப் பறிப்பிற்கும், பூர்வீகச் சின்னங்கள் சிதைத்தழிக்கப்பட்டு தமிழர் இருப்பு மறுக்கப்படுவதற்கும் எதிராக அந்தந்தப் பிரதேச மக்கள் மட்டும் எதிர்ப்புக் காட்டினால் முடியுமா? தமிழ் மக்கள் அனைவரும் ஒருமித்து எதிர்ப்பைக் காட்ட வேண்டாமா? பிரச்சனையை, வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சுக்கு எடுத்துச் சென்றதால் தண்ணீரூற்று நிலச் சுவீகரிப்பு தற்போதைக்கு நிறுத்தப்பட்டிருக்கிறது. எவ்வளவு காலத்திற்கு இது நிறுத்தப்படும்?

அரசாங்கத்தின் முழு அனுசரணையுடன் தமிழர் நிலங்கள் அபகரிக்கப் படுகின்றன. இந்த நிலையில், சர்வ கட்சிகளையும் உள்ளடக்கிய தேசிய சபையில் இருக்கும் எமது தமிழ்ப் பிரதிநிதிகள் ஆக்ரோஷமாகத் தலையிட வேண்டாமா? அரசியற் தலையீடு இல்லாமல் அந்தந்தப் பிரதேசங்களில் வாழும் மக்கள் மட்டுமே எதிர்ப்பைக் காட்டுவதன் மூலம் நிலஅபகரிப்பை தடுத்து நிறுத்துவது என்பது சாத்தியமற்றது. தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் வாழும் எமது மக்களும் அரசியல்வாதிகளும் இணைந்து செய்யும் கடுமையான முயற்சியினால் மட்டுமே தமிழர் இனப்பரம்பலை சிதைக்கும் நில அபகரிப்பை தடுத்து நிறுத்த முடியும்.



பாரி

# போதையால் அழிக்கப்படும் தமிழினம்

தமிழர்களின் இருப்பையும் இறைமையையும் அழித்து, தமிழினத்தை கருவறுக்கும் திட்டத்தை சிங்கள அரசு கச்சிதமாகச் செய்து வருகின்றது. அதன் ஒரு வெளிப்பாடான நிலப்பறிப்பும், அதன் பின்னணியில் இனப்பரம்பலின் ஊடாக தமிழர் பூர்வீக நிலத்தை அபகரிப்பதுமான செயல் ஒவ்வொரு நாளும் அரங்கேறுகின்றது. இதனால், அதை எதிர்த்துப் போராடுவது, எதிர்ப்புக் குரல் எழுப்புவது என்பது தமிழ் மக்களின் நாளாந்த கடமையாகிவிட்டது. தமிழர்களின் கவனத்தை அங்கே திருப்பிவிட்டு, இனத்தைக் கருவறுக்கும் ஒரு பாரிய திட்டம் அரசினாலும், அதன் உயர்மட்டத்தில் இருப்பவர்களினாலும் திட்டமிட்ட முறையில் நடத்தப்படுவதை நம்மில் பலபேர் இன்னமும் உணர்ந்துகொள்ளவில்லை. அதுதான் போதைப்பொருள் விநியோகம்.



வடக்கு, கிழக்கு, மலையகம் என்று தமிழ் மக்களின் பூமியெங்கும் போதைப்பொருள் பாவனை கட்டுக்கடங்காமல் பெருகிச் செல்கிறது. ஹெரோயின், ஐஸ், மாவா என்று பல வடிவங்களில் தமிழர் பிரதேசங்களுக்குள் கொண்டு வரப்படும் இந்த போதைப் பொருட்கள் எங்கள் இளைய சமுதாயத்தைக் கருவறுக்கும் வேலையைக் கச்சிதமாகச் செய்கின்றன.


இதனால், உயிரிழப்புகள், கலாசார சீர்கேடுகள், ஏற்கனவே பாரிய இனவழிப்பிற்குள்ளான எங்கள் சனத்தொகை பாரியளவில் வீழ்ச்சியடைவது, கல்விச் சிதைவினால் படித்த, பண்பட்ட சமுகம் இல்லாமற் போதல் [மாணவர்கள் இல்லாமல் ஏற்கனவே பல பாடசாலைகள் மூடப்பட்டுக் கொண்டிருக்கின்றன], சிந்திக்கவியலாத நிலையில் எப்போதும் ஒரு மனக்குழப்பத்திலேயே இருப்பதால் சரி தவறு எதையும் பகுத்தறிய முடியாமல் அடிமைகளாகவே வாழ்வது என்று எமது இனமே அடியோடு அழிக்கப்படுகிறது. அண்மைக் காலத்தில் மட்டும் யாழில் 10 இற்கும் மேற்பட்ட ஹெரோயின் மரணங்கள் நிகழ்ந்திருக்கின்றன. 320 பேர் போதைப்பொருட்களுடன் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். யாழில் மட்டும் 20 இற்கு மேற்பட்ட கிராமங்கள் போதைப்பொருட்களுக்கு அடிமையானோர் வாழும் கிராமங்களாக அடையாளப்படுத்தப் பட்டுள்ளன.

தொடர்ந்து ஹெரோயின் ஊசியை ஏற்ற முடியாத நிலை



# போதையால் அழிக்கப்படும் தமிழினம்

எழும்போது போதைக்கு அடிமையான வர்கள் வேறொரு உத்தியைக் கையாள் வதாக கிளிநொச்சி மாவட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தமக்கு ஏதோவொரு நோய் பீடித்துள்ளதான சாட்டுடன் அவர் கள் கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்படுகின்றனர். கனுலா [cannula] என்ற சேலைன் ஏற்றுவதற் கேற்ற ஊசியை வைத்தியர் வருவதற்கு முன், நோயாளிகளுக்கு ஏற்றி தாதியர் தயாராக இருக்கும் வழமையை தமக்கு



சாதகமாக்கி, கனுலா ஏற்றியதும் மாய மாகி விடுகின்றனராம். இந்த கனுலா ஊடாக ஹெரோயினை அவர்கள் ஏற்றிக் கொள்கின்றனர் என்ற அதிர்ச்சித் தகவ லும் கிடைத்துள்ளது.

18 – 23 இடைப்பட்டுள்ள வயதினரே போதைப்பழக்கத்தால் பாதிக்கப் பட் டுள்ளனர் என்று புள்ளி விபரங்கள் சொன்னாலும், மிகவும் இள வயதினர் கூட திட்டமிட்டு உள்வாங்கப்படுவதை களத்தில் பார்க்க முடிகிறது. போதைப் பொருள் விநியோகத்தில் மாணவர்கள் பயன்படுத்தப் படுகின்றனர். குறிப்பாக பெற்றோரை இழந்த பிள்ளைகள், பெற் றோர் கவனிக்கத் தவறிய பிள்ளைகள், வெளிநாடுகளில் பெற்றோர் வதியும் பிள்ளைகள் என்று பலவீனமான நிலை யிலிருக்கும் பிள்ளைகள் இதற்கெனக் குறிவைக்கப் படுகின்றனர். பல்கலைக் கழகங்கள், பிரபல பாடசாலைகளின் வெளியேயும் ஏன், உள்ளேயும் கூட போதைப்பொருள் விநியோகம், வணிகம் நடைபெறுவதை பலர் சுட்டிக் காட்டியும் நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படாதது ஏன்? அப்படி நடவடிக்கை எடுக்க வேண் டிய நிர்ப்பந்தம் ஏற்படும்போது கூட சிறிய தண்டனையுடன் அவர்களை விட்டுவிடு வதன் காரணம் என்ன?

சிறிய தீவாக இருக்கும் இலங்கையி னுள் யார் கண்ணிலும் படாமல் எப்படி போதைப்பொருள் உட்புக முடியும்? அரச உயர்மட்ட ஆதரவு இல்லாமல் இது சாத்தி யமில்லை என்பதும் எல்லோருக்கும் தெரி யும். 2019 இல் நடந்த சனாதிபதி தேர்தல் பிரசாரத்தில் போதைப்பொருளை ஒழித் துக்கட்டுவதற்கு முன்னுரிமை அளிப்பேன் என்று கோத்தபாய கூறியதையும், அதற்கு முன்னர் மகிந்த சனாதிபதியாக இருந்தபோது போதைவஸ்துக்கள் அவரது அமைச்சரவை

**“ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டு விட்டன, இனி யாரும் அந்த எண்ணத்துடன் வடக்கு கிழக்கில் நடமாட முடியாது என்று கண்காணிக்கும் அரச காவற்துறையையும் இராணுவத்தையும் கடந்து போதைப்பொருட்கள் உள்நுழைய முடியுமென்றால், அது அவர்கள் வாகனங்களில்தான் வந்திருக்க முடியும். அரச அதிகார பீடத்திற்கும் போதை வணிக மையத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. வடக்கு கிழக்கில் பல கடற் படை அதிகாரிகள் போதைப்பொருள் விநியோகத்தருடன் பங்காளிகளாக இருப்பதும் தெரிய வந்துள்ளது. பாராளுமன்ற உறுப்பினர்களில் பலர் போதை வாணிபத்தில் ஈடுபட்டிருப்பது பாராளுமன்றில் முன்வைக்கப்பட்டும் இன்றுவரை எந்த விசாரணையும் நடைபெறவில்லை. பெண் பாராளுமன்ற உறுப்பினர் சிலர் இன்னும் போதைப்பொருள் பாவனையாளர்களாக உள்ளனர்.”**

வாகனங்களில் கடத்தப்பட்டது பதிவாகியி ருந்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை என்பதையும் கூட்டிக் கழித்துப் பாருங்கள். ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டு விட்டன, இனி யாரும் அந்த எண்ணத்துடன்



# போதையால் அழிக்கப்படும் தமிழினம்

வடக்கு கிழக்கில் நடமாட முடியாது என்று கண்காணிக்கும் அரச காவற்துறையையும் இராணுவத்தையும் கடந்து போதைப்பொருட்கள் உள்நுழைய முடியுமென்றால், அது அவர்கள் வாகனங்களில்தான் வந்திருக்க முடியும். அரச அதிகார பீடத்திற்கும் போதை வணிக மையத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. வடக்கு கிழக்கில் பல கடற் படை அதிகாரிகள் போதைப்பொருள் விநியோகத்தருடன் பங்காளிகளாக இருப்பதும் தெரிய வந்துள்ளது. பாராளுமன்ற உறுப்பினர்களில் பலர் போதை வாணிபத்தில் ஈடுபட்டிருப்பது பாராளுமன்றில் முன்வைக்கப்பட்டும் இன்றுவரை எந்த விசாரணையும் நடைபெறவில்லை. பெண் பாராளுமன்ற உறுப்பினர் சிலர் இன்னும் போதைப்பொருள் பாவனையாளர்களாக உள்ளனர். போதை வணிகத்தில் ஈடுபடுவோரை அம்பலப்படுத்த முயன்ற பத்திரிகையாளர் பலர் அச்சுறுத்தப் பட்டிருக்கின்றனர். காவலர் சிலருக்கு இடமாற்றத்துடன் கூடிய அச்சுறுத்தல் விடப்பட்டிருக்கிறது.

வடக்கில் அருண் சித்தார்த், கிழக்கில் பிள்ளையானின் கையாளான இனியபாரதி போன்ற போதைப்பொருள் விற்பனையாளரை இராணுவ உதவியுடன் மக்கள் பிரதிநிதியாகக் காட்ட அரசு பிரயத்தனப்படுகிறது. அதிலும் 164 கிலோ போதைப்பொருளுடன், அரச VIP வாகனத்தில், மன்னாரில் இருந்து அம்பாறை திருக்கோவிலுக்கு போதைப்பொருளைக் கடத்திய போது கையும் களவுமாக மாட்டியவன் இனியபாரதி. இன்று சுதந்திரமாக நடமாடுகிறான். இவர்கள் அனைவரும் மகிந்த குடும்ப சேவகர்கள். ரணிலும் மகிந்த குடும்பத்து சேவகன்தான் என்று நீங்கள் சொல்வதும் கேட்கிறது. இதனால், சட்டம் ஒழுங்கிற்கூடாக போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்தலாம் என்ற எண்ணத்தை மறந்துவிடுங்கள்.

**பெற்றோர், ஊர்மக்கள், ஊர்ப் பொதுக்குழுக்கள், ஆசிரியர்கள், மக்கள் பிரதிநிதிகள், என்று அனைவருமே ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய நேரம் இது. எப்போதும் விழிப்புடன் இருந்து இளைய சமுதாயத்தை கட்டிக் காக்க வேண்டிய காலம் இது. நடைபெற்ற போராட்டம் என்பது வெறுமனே மண்ணை மட்டும் மீட்கும் போராட்டமல்ல என்பதை இப்போது காலம்கடந்து பலர் உணர்ந்திருக்கிறார்கள். கட்டுப்பாட்டுடன் இருந்த காலத்தில் தவறுகள் தேடி அழிக்கப்பட்டன. எங்கள் நிலம் மட்டுமல்லாமல் முழு இலங்கையும் அந்நியர் அத்துமீறலுக்குட்படாமல் பாதுகாக்கப்பட்டது தெரிந்ததே. பிள்ளைகளுக்கு நல்ல விடயங்களை திரும்பத்திரும்பச் சொல்லி வளருங்கள். அவர்கள் செயற்பாடுகளைக் கண்காணியுங்கள்.**



பெற்றோர், ஊர்மக்கள், ஊர்ப் பொதுக்குழுக்கள், ஆசிரியர்கள், மக்கள் பிரதிநிதிகள், என்று அனைவருமே ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய நேரம் இது. எப்போதும் விழிப்புடன் இருந்து இளைய சமுதாயத்தை கட்டிக் காக்க வேண்டிய



காலம் இது. நடைபெற்ற போராட்டம் என்பது வெறுமனே மண்ணை மட்டும் மீட்கும் போராட்டமல்ல என்பதை இப்போது காலம்கடந்து பலர் உணர்ந்திருக்கிறார்கள். கட்டுப்பாட்டுடன் இருந்த காலத்தில் தவறுகள் தேடி அழிக்கப்பட்டன. எங்கள் நிலம் மட்டுமல்லாமல் முழு இலங்கையும் அந்நியர் அத்துமீறலுக்குட்படாமல் பாதுகாக்கப்பட்டது தெரிந்ததே. பிள்ளைகளுக்கு நல்ல விடயங்களை திரும்பத்திரும்பச் சொல்லி வளருங்கள். அவர்கள் செயற்பாடுகளைக் கண்காணியுங்கள். ஆடம்பரமாக, கட்டுப்பாடின்றி பிள்ளைகளை விடுவதால் எழும் பிரச்சனைகளைப் பெற்றவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். எங்கள் சமுதாயத்தின் எதிர்காலம் எங்கள் கரங்களில் மட்டுமே உள்ளது.



டிலக்ஷி

# கஞ்சா விற்று டொலர் சம்பாதிக்கும் அரசு

ஒரு மணித்தியாலத்திற்கு 32 இலங்கை பிரஜைகள் வெளிநாடு செல்வதாகவும் கடந்த 8 மாதங்களில் 500வைத்தியர்கள்,பொறியியலாளர்கள் மற்றும் பெருந்தொகையான புத்திஜீவிகள் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளதாகவும் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.எந்தவொரு நாட்டிலும் குடிமக்கள் இரண்டு காரணங்களுக்காக வெளிநாடு செல்கிறார்கள். முதலாவது அவர்கள் வெளிநாடுகளுக்கு குடிபெயர்வது. இரண்டாவது,அவர்கள் வேலைக்குச் செல்கிறார்கள். வெளிநாடுகளுக்கு புலம்பெயர்வோர் பற்றி தாய் நாடு பெரிதாக அலட்டிக்கொள்வதில்லை. புலம்பெயர்ந்தவர் எப்பொழுதும் வெளிநாட்டில் வேலை செய்து தனது குடும்பத்தை அங்கேயே வைத்துக் கொண்டு சம்பாதித்த பணத்தை



**"திருட்டு அரசியல்வாதிகளை கைது செய்ய முடியாத ஆட்சியாளர்கள் கஞ்சாவை உற்பத்தி செய்து வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்ய ஆலோசித்து வருகின்றனர். இது நாட்டிற்கு டொலர் கொண்டு வரும் ஒரு அறிகுறியாக தெரியவில்லை. எதிர்கால தலைமுறையை போதைக்கு அடிமையாக்கி அவர்களை சூறையாடும் படலம் என்று தான் கருத வேண்டும்."**

அந்நாட்டிலேயே செலவு செய்கிறார். ஆனால் வெளிநாட்டிற்கு வேலைக்காகச் செல்லும் மனிதர் பயனுள்ளவர். அந்த நாட்டில் வேலை செய்து சம்பாதித்த பணத்தை இந்த நாட்டுக்கு அனுப்புகிறார். இந்த பணம் அந்நிய செலாவணி என்று அழைக்கப்படுகிறது.

தற்போது, இந்நாட்டின் பொருளாதாரத்தில் மூன்று முக்கிய அந்நியச் செலாவணி ஈட்டும் துறைகள் உள்ளன. முதலாவது வெளிநாட்டில் வேலை செய்பவர்கள் இலங்கைக்கு அனுப்பும் பணம்.இலங்கைக்கு அந்நியச் செலாவணியைக் கொண்டு வரும் இரண்டாவது குழு ஆடைத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள்.அடுத்ததாக,சுற்றுலாத்துறையில் ஈடுபடுபவர்களும் இலங்கைக்கு அந்நிய செலாவணியை ஈட்டித் தருகிறார்கள். இதற்குச் சில காலங்களுக்கு முன்னர் இந்நாட்டுக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித்தந்த முக்கியக் குழுவானது தேயிலை,தேங்காய்,இறப்பர் போன்றவற்றை நாட்டிற்கு ஏற்றுமதி செய்த தோட்டத் தொழிலாளர்கள். மேலும், சிறிய ஏற்றுமதி பயிர்கள் அல்லது வாசனை திரவியங்களை வெளிநாட்டுக்கு அனுப்பியவர்களும், ரத்தினங்களை அந்நிய நாட்டிற்கு



# கஞ்சா விற்று டொலர் சம்பாதிக்கும் அரசு

அனுப்பியவர்களும் கணிசமான அளவு அந்நிய செலாவணியை இந்நாட்டிற்கு சேர்த்தனர். இங்கு,ரத்தினங்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவது ஒருவித கேள்விக்குரிய வணிகமாக விவரிக்கப்படலாம். பெரும்பாலான ரத்தினங்கள் வெளிநாடுகளுக்குக் கடத்தப்படுகின்றன. சில சமயங்களில் ரத்தினங்களை விழுங்கி வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்கின்றனர். இவை பல்வேறு வழிகளில் மறைத்து வெளிநாடுகளுக்கு கொண்டு செல்லப்படுகின்றன.

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு அரசியல் சீர்திருத்தம் மற்றும் பொறுப்புக்கூறலைக் கோரும் செயற்பாட்டாளர்களை துன்புறுத்துவதற்கும் தன்னிச்சையாக தடுத்து வைப்பதற்கும் அரசாங்கம் சட்டத்தை கையில் எடுத்துள்ளது. வாக்களித்த மக்கள் தம் உரிமைகளை பெற்றுக்கொள்ள கடுமையாக போராடுகின்றனர். நாட்டில் இந்த பொருளாதாரத்துக்கு காரணமான அரசியல் தலைவர்கள் இதுவரையில் கைது செய்யப்படவும் இல்லை அவர்கள் விசாரிக்கப்படவும் இல்லை. அப்பாவி ஜனங்கள் தினம் தோறும் தம்முடைய உரிமைகளை பெற்றுக் கொள்வதற்காக போராடி போராடி சிறைவாசம் செல்கின்றனர். ஜனநாயகம் நிறைந்த நாடு என்று கூறி மக்களை பாதாளத்தில் தள்ளி வேடிக்கை பார்க்கிறது இலங்கை அரசாங்கம். அழகிய எழில் கொஞ்சும் இலங்கை இன்று கண்ணீரோடு வாழும் அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இதற்கு காரணமானவர்கள் அமைதியாக தங்களுடைய சுயநலங்களுக்காக தங்களுடைய குடும்பத்துடன் சந்தோஷமாக வாழ்ந்து வருகின்றனர். அன்றாடம் கூலிக்கு மாரடிக்கும் கூலி தொழிலாளி தனக்கும் தன்னுடைய குடும்பத்துக்கும் பசிக்கு உணவு இன்றி தினம் தினம் கண்ணீர் வடிக்கிறான்.

அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வால், உணவு, மருந்து, அத்தியாவசியப் பொருட்களை வாங்க முடியாமல் பலர் பரிதவித்து வருகின்றனர். இலங்கையின் இன்றைய

> **நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு அரசியல் சீர்திருத்தம் மற்றும் பொறுப்புக்கூறலைக் கோரும் செயற்பாட்டாளர்களை துன்புறுத்துவதற்கும் தன்னிச்சையாக தடுத்து வைப்பதற்கும் அரசாங்கம் சட்டத்தை கையில் எடுத்துள்ளது. வாக்களித்த மக்கள் தம் உரிமைகளை பெற்றுக்கொள்ள கடுமையாக போராடுகின்றனர். நாட்டில் இந்த பொருளாதாரத்துக்கு காரணமான அரசியல் தலைவர்கள் இதுவரையில் கைது செய்யப்படவும் இல்லை அவர்கள் விசாரிக்கப்படவும் இல்லை. அப்பாவி ஜனங்கள் தினம் தோறும் தம்முடைய உரிமைகளை பெற்றுக் கொள்வதற்காக போராடி போராடி சிறைவாசம் செல்கின்றனர்.**



# கஞ்சா விற்று
## டொலர் சம்பாதிக்கும் அரசு

சூழ்நிலையின் அடிப்படையில், வாரத்திற்கு நான்கு பேர் கொண்ட குடும்பத்திற்கு மட்டும் உணவுக்கான விலை அவர்களுடைய வருமானத்தை விட அதிகமாகியுள்ளது. கடந்த ஏப்ரல் மாதத்தில் 29.8 ஆக இருந்த பணவீக்கம் 39.1 ஆக உயர்ந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் தரவுகள் தெரிவிக்கின்றன. இந்த நிலையில் பொருளாதார நெருக்கடியை சமாளித்துக் கொள்ள முடியாத நம் அடுத்த தலைமுறையினர் நாட்டின் பல பகுதிகளில் போராட்டத்தை நடத்தி வருகின்றனர். அவர்களின் போராட்டத்திற்கு ஈடு கொடுக்க முடியாத அரசாங்கம் அவர்களை கைது செய்து வேடிக்கை பார்க்கின்றது.

திருட்டு அரசியல்வாதிகளை கைது செய்ய முடியாத ஆட்சியாளர்கள் கஞ்சாவை உற்பத்தி செய்து வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்ய ஆலோசித்து வருகின்றனர். இது நாட்டிற்கு டொலர் கொண்டு வரும் ஒரு அறிகுறியாக தெரியவில்லை. எதிர்கால தலைமுறையை போதைக்கு அடிமையாக்கி அவர்களை சூறையாடும் படலம் என்று தான் கருத வேண்டும். இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன, அரசாங்கத்தினால் விநியோகிக்கப்படும் திரிபோஷாவில் உள்ள அஃப்ளாடோக்சின் என்ற நச்சுப்பொருள் தரத்தை விட உயர்வானது என்று அறிக்கை வெளியிட்டுள்ளார். இதெல்லாம் அடித்தட்டு மக்களை ஒழித்திட அரசாங்கம் தீட்டியுள்ள திட்டம் தான்.

ஏழு தசாப்தங்களுக்கும் மேலாக மோசமான பொருளாதார நெருக்கடியுடன் போராடி வரும் இலங்கையின் வருடாந்த பணவீக்க விகிதம் ஆகஸ்ட் மாதத்தில் 70% ஆக உயர்ந்துள்ளது. உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்ட தரவுகளும் உணவுப் பொருட்களின் விலைகள் கடந்த ஆண்டை விட 84.6% அதிகரித்துள்ளது. 22 மில்லியன் சனத்தொகையைக் கொண்ட இலங்கை, இந்த ஆண்டு வெளிநாட்டு நாணயப் பற்றாக்குறையை எதிர்கொண்டதால், நிதி மற்றும் அரசியல் குழப்பத்தில் மூழ்கியுள்ளது. எரிபொருள், உரம், மருந்துகள் உள்ளிட்ட முக்கிய இறக்குமதிகளும் இலங்கைக்கு கட்டுப்படியாகாத நிலை ஏற்பட்டுள்ளது. கொரோனா காலக்கட்டத்தில் சுற்றுலாத்துறையில் ஏற்பட்ட வீழ்ச்சியும் இலங்கையில் பல வருட நிதி நிர்வாகச் சீர்கேட்டும் தான் இந்த பொருளாதார நெருக்கடிகளுக்கு முக்கிய காரணம்.

தற்போதைய நெருக்கடிக்கு நிர்வாக அமைப்பின் தோல்வியே காரணம். இந்தக் குரல், ஏற்கனவே உள்ள சிஸ்டத்தை முழுமையாகத் திருத்த அல்லது சீர்திருத்த ஒரு முறையைத் தேட வழிவகுத்தது. அதற்கு முன் தற்போதைய நெருக்கடிக்கான காரணத்தை ஆராய்வது புத்திசாலித்தனம். இரண்டு விஷயங்களில் கவனம் செலுத்த வேண்டியது காலத்தின் தேவை. முதலாவது, ஒழுக்கமான நிர்வாகத்தை ஊக்குவிக்கும் அரசியலமைப்பு நியமங்கள் மற்றும் வழிகாட்டல்களை அபிவிருத்தி செய்வதில் முழு பாராளுமன்றத்தையும் ஈடுபடுத்துவது மற்றும் இரண்டாவது பொருளாதாரத்தை நிலைநிறுத்துவதற்கு நிலையான பொருட்களை வழங்குவதன் மூலம் இலங்கை மக்கள் இன்று அனுபவிக்கும் இன்னல்களை தாங்குவதைத் தடுப்பதாகும்.





மாலினி மோகன்

# கேள்விக்குறியாகும் எதிர்காலம்

## இலங்கையில் தமிழ் மாணவர்களை ஆக்கிரமிக்கும் போதை பொருள்– இளவயது கர்ப்பங்கள்

இலங்கையில் இன்று எல்லோரையும் திரும்பிப் பார்க்க வைத்த ஒரு விடயம் கொரோனாவுக்குப் பிறகு இந்த கொடிய போதைப் பொருள் பழக்கமாகி உள்ளது. கொரோனாவுக்குப் பயந்து வீட்டுக்குள்ளே அடைந்தவர்கள் இன்று இன்னுமொரு வைரசுக்கு அடிமையாகியுள்ளனர் என்றே கூற வேண்டும். அதிலும் சிறுவர்கள் ஒட்டுமொத் தமாக இந்த போதைப் பொருட்களிடம் தோற்று போயுள்ள னர். எங்கு பார்த்தாலும் ஏதாவது ஒரு போதைப் பொருள் பற்றிய செயதி எம் காதுகளுக்கு வந்த வண்ணமே உள்ளது. குழந்தை முதல் குமரி வரை எங்கும் அவர்களை தம் வசப் படுத்தி கட்டுக்குள் கொண்டுள்ளது இந்த போதை என்றால் அது மிகையல்ல. ஆச்சர்யம் கலந்த பயத்தில் கண்கள் அகல விரியுதே தவிர ஆகியது ஒன்றும் அல்ல . தொடர்ந்து போதை பரவல் தன் வேலையை பல்வேறு கோணங்களில் காட்டிக் கொண்டே பரந்து விரிந்து வியாபித்த வண்ண முள்ளது.

பொதுவாக இன்றைய கால கட்டத்தில் வடக்கு, கிழக்கு, மலையக பகுதிகளில் போதைப் பொருள் பாவனை தற்போது அதிகரித்து வருவதை அறிய முடிகின்றது. யாழ்ப்பாணத் தின் வடக்கில் போதைக்கு அடிமையாகியதில் அண்ணன் தம்பியே கூட்டு வன்புனர்தலில் ஈடுபட்டு வருவதாக அறிய முடிகின்றது. பாடசாலை மாணவர்கள் மாவா, ஐஸ் என் கின்ற போதைப் பொருட்களுக்கு பழக்கப்பட்டு



# கேள்விக்குறியாகும் எதிர்காலம்

பல்வேறு பிரச்சினைளுக்கு பெற்றோர்களும் ஆசிரியர்களும் முகம் கொடுத்து வருவது யாவரும் அறிந்ததே. இன்று இதன் விஸ்வரூபம் பல்வேறு வண்ணங்களில் இனிப்பு பண்டமாக சந்தைகளுக்கு வந்துள்ளது. பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்தே கவர்ச்சிகரமான நிறங்களுடன் விற்பனை செய்யப்படுகிறது. நாட்டின் எதிர்கால தலைமுறையை அழிக்கும் ஒரு வேலைதிட்டமாக இன்று இப்போதைப் பொருளின் வருகை பதிவாகியுள்ளது. இது தொடர்பான படங்களும் விழிப்புணர்வு பதிவுகளும் சமூக வலைத்தளங்களில் இன்று பேசு பொருளாக காணக் கூடிய நிலையிலும் வடக்கு,கிழக்கு, மலையக பாடசாலை மாணவர்கள் இந்த இனிப்பு போதைப் பொருள் பாவனையில் உள்ளதாக சமூக ஆர்வலர்கள் விசனம் தெரிவித்து வருகின்றனர்.

இது இவ்வாறு இருக்க வடக்கு, கிழக்கு பகுதிகளில் பாடசாலைகளில் பெண் பிள்ளைகள் சிலர் சிகரெட் பிடிக்கும் கலாசாரத்தை தன்வசப்படுத்தி வருகின்றனர். சில செலவந்த குடும்பத்தை சேர்ந்த பிள்ளைகளே இவ்வாறு போதைக்கு அடிமையாகி வருகின்றனர். மேலும் யாழில் ஊசிகள் மூலம் போதைப் பொருள் விற்கப்பட்டு வருகிறது. இதன் போது ஊசிகள் பயன்படுத்திய 10 பேர் உயிரிழந்ததாகவும், சுமார் 320 பேர் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கப்படுகிறது. இவர்களில் பெரும்பாலானோர் 18 – 23 வயதிக்கு உட்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பொது இடங்களில் போதை அருந்துதல் தடை ஆயினும் இன்று இதுவே இடைவிடாது இடம் பெறுகிறது. பாதுகாப்பு படையினர் சிலர் கண்டும் காணாமல் போவதும், அவ்வாறு அன்றி அவர்களையும் தன் வசப்படுத்தி அதில் பலர் குளிர் காய்கின்றனர்.

இப்படி பட்ட காவலாளிகள் கூட்டம் எப்படி உருப்படும். எவருக்குத்தான் பயப்படும். மேலும் பிரபல பாடசாலைகளின் மாணவர்கள் சிறுவயதில் கர்ப்பம் தரிப்பது எண்ணளவில் இன்று அதிகரிகின்றது. மலையகத்தின் பிரபல பாடசாலை ஒன்றில் இவ்வருடத்தில் மட்டும் சிறுவயது கர்ப்பம் தரித்த பெண்கள் சுமார் 5 என தெரிய வந்துள்ளது. பெண் பிள்ளைகள் போதைக்கு அடிமை ஆவதும் சிறுவயதில் கர்ப்பம் தரிப்பதும் அவர்களின் எதிர்கால வாழ்வையே அழித்து விடுமால்லவா. இது மிக பெரிய சிறுவர் துஸ்பிரயோகம் அல்லவா.

எங்கே தான் செல்கிறது எமது கலாசாரம்? இப்பாதிப்பு எம் தமிழ் இனத்துக்கே சாபக்கேடாகி உள்ளது. எனைய முஸ்லீம், சிங்கள இன மக்களின் சில கட்டு கோப்பான





சாம்பிரதாயங்கள், பழக்கவழக்கங்கள், ஒற்றுமை என்பன அவர்கள் இனத்தை பாதுகாத்து உள்ளது என்றே கூற வேண்டும்.

'எந்த குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே.. அது நல்லவர் ஆவதும் தீயவர் ஆவதும் அன்னை வளர்ப்பினிலே '

இது பழைய கதை. இன்று நல்லவர் ஆவதும் தீயவர் ஆவதும் செல்போன் பாவனையிலே இது புதிய கதை. இன்று பிறக்கும் குழந்தைகள் செல்போன் உடனே பிறக்கின்றன. உணவுக்கு, உறவுக்கு, கல்விக்கு, தனிமைக்கு என அவர்களுக்கு செல்போன் தேவை படுகிறது. இப்படியே காலப்போக்கில் தனிமையில் செல்போனுடன் அடைந்து கொள்கின்றனர். மனிதரை மறந்து உயிரில்லா ஒன்றுக்காக உயிரையே விடுகின்றனர். அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம். இன்று செல்போன் மட்டுமே இளைய சமூகத்திற்கு கண்கண்ட தெய்வம் ஆயிற்று. மேற் குறிப்பிட்ட மாவோ, ஐஸ், டொபி, சிகரெட், மதுபானம் என்பன ஒரு வகை போதை என்றால் இவற்றை எல்லாம் சிறுவர்களுக்கு அறிமுகம் செய்யும் செல் போன் எனும் போதையை என்னவென்று சொல்வது.

> **"இன்று பிறக்கும் குழந்தைகள் செல்போன் உடனே பிறக்கின்றன. உணவுக்கு, உறவுக்கு, கல்விக்கு, தனிமைக்கு என அவர்களுக்கு செல்போன் தேவை படுகிறது. இப்படியே காலப்போக்கில் தனிமையில் செல்போனுடன் அடைந்து கொள்கின்றனர். மனிதரை மறந்து உயிரில்லா ஒன்றுக்காக உயிரையே விடுகின்றனர். அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம். இன்று செல்போன் மட்டுமே இளைய சமூகத்திட்கு கண்கண்ட தெய்வம் ஆயிற்று."**



முன்பெல்லாம் பாடசாலை மாணவர்களின் பைகள் சோதனைக்கு உட்படுத்த தேவை இருக்க வில்லை. ஆனால் தற்போது சில தரகர்கள் மற்றும் போதைப் பொருள் வியாபாரிகள் போதைப்பொருளை விநியோகிக்க மாணவர்கள் பயன்படுத்தப்படுவதாக தெரிய வந்ததை அடுத்து நகர்ப்புற மற்றும் பிரதான பாடசாலைகளில் மாணவர்களின் பாடசாலை பைகளை பரிசோதிக்கும் முறைமையொன்று தயாரிக்கப்படும் என கல்வி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். இம்முறைமை பாடசாலை மாணவர்களை வெகுவாக பாதிக்கவே கூடும்.

இவ்வாறு எம் சமூகம் ஒன்றை கடந்து இன்



னொன்றை கடந்து அடுத்து அடுத்து புதிய புதிய போதைப் பொருளுக்கு அடிமையாகி கொண்டே செல்வதால் இளைய சமுதாயம் எப்படி எதிர்கால தலைமையை ஏற்க போகின்றது.

நாட்டுக்கு தேவையான வைத்தியர்கள், பொறியியலாளர், சட்டதரணி, ஆசிரியர்களை எங்கே தேடுவது? இப்படியே சென்று கொண்டிருந்தால் இப்போது நாடு எதிர்கொள்ளும் பொருளாதார சிக்கலை விட பன்மடங்கு பல்வேறு பிரச்சினைகளை நாடு எதிர்கொள்ள நேரிடும் என்பது கண்கூடு. படித்த சமுதாயம் ஒன்று உருவாக்கப்பட்டால் மட்டுமே எம் சமுதாயம் தலைநிமிரும். அன்றேல் இப்படி பல்வேறு போதைப் பொருள்களுக்கு அடிமையாகி நாட்டை, வீட்டை சீரழிக்கும் கூட்டம் தொடர்ந்து பெருகி சென்றால் சிறிது காலத்துக்குள் எம் தமிழ் இனம் தலை மறைவாகி போவது உறுதியே.

# போய் வருகிறேன் எந்தன் நாடே!!

**கார்த்திகை**



ஒரு ஒளிவட்டம்
என்னைச் சுற்றி..
இனம்புரியா அமைதி
என்மனதில்.
தேகத்தை வாட்டிய
வேதனை எங்கோ
மாயமாய் மறைந்து போனது
நேற்றைய கடமை
இனிதே முடிந்தது..
நாளை?
சிந்திக்க முடியாமல்
ஏதோ தடுத்தது..

ஆதரவாக
தோளில் தொட்டது
ஒரு கரம்.
எழு பத்து ஆண்டுகளையும்
கடந்த என் காதல்..
என் தோழன் என்னில் பாதி..
என் 'பிலிப்'
பரிவுடன் என்னைப்
பார்த்தார்.

புரிகிறது!!
ஒரு வழிப் பயணத்திற்கு
நான் தயார்!
திரும்பிப் பார்க்கிறேன்

கூட்டமாய் எனது
குடும்பம்
இருண்டுபோன
முகங்களுடன்!
தலைமைக்குரிய மிடுக்கும்
தனயனுக்குரிய
பரிவும் பதட்டமுமாக
என் தலைமகனும்
என்னைச் சூழ நின்ற
பலரின் கண்களில்
நீர்த் தாரையுமாக!

நடுவில் அமைதியாக
துயிலும் நான்..!!

சுற்றுமுற்றும்
பார்க்கிறேன்..!
முடிந்த வரை
கண்களால் பருகுகின்றேன்

எனதருமை தாய் நிலமே!!
நெடிய
எழுபது ஆண்டுகள்
சேவகம் செய்ய
அனுமதி தந்தாய்!
இன்று..
பிரியாவிடை தா..!!

அண்டை அயலிலும்
அகிலம் எங்கிலும்
அரசமைக்கவும்
கோலோச்சவும்
வழி செய்த தேவனே!!
நன்றி! நன்றி!
காலனித்துவம் என்ற
பெயரில் என் முதாதையரும்
நானுமாய்
செய்த அக்கிரமங்கள்
அத்தனையையும்
நானே பொறுப்பேற்கிறேன்..!
தேவனே!! இவற்றை
என் பாவக் கணக்கில்
எழுதிக் கொள்ளும்
என்னை மன்னித்தருளும்..!!

ஒளி வெள்ளப் பாதையில்
பிலிப்புடன்
கரம்கோர்த்து நடக்கிறேன்..!!
அளவிலா நிம்மதி
என்னைச் சுற்றி.
போய் வருகிறேன்
என் நிலமே!!
சேவகம் செய்ய
அனுமதித்த எனதருமை
மக்களே!!
எனது நன்றிகள்!!
போய் வருகிறேன்.
விடை கொடுங்கள்!!



ஐங்கரன் விக்கினேஸ்வரா

# வலுக்கும் பலூசிஸ்தான் மக்களின் போராட்டம்

## இன வன்முறையை தொடரும் பாகிஸ்தான்; கனிமவளங்களின் சுரண்டலில் சீனா.

முதன்முறையாக பாகிஸ்தானின் அரசியல் கட்சியிடமிருந்தே, தனி பலூசிஸ்தான் வேண்டும் என்ற கோரிக்கை குறித்து வெளிப்படையான குரல் எழுந்துள்ளது. கடந்த மாத இறுதியில் எதிர்க்கட்சி பி.டி.எம் **(PDM)** நடத்திய பேரணியில், ஜாமியத் உலமா–ஈ–பாகிஸ்தான் தலைவர் ஓவைஸ் நூரானி ஆசாத், தனி பலூசிஸ்தான் அமைக்கப்படும் அறிவித்தார்.

### எதிர் கட்சியின் தனிநாடு கோரிக்கை

மற்றும் பாகிஸ்தான் ஜனநாயக இயக்கம் ஏற்பாடு செய்த பேரணியில், பலூசிஸ்தானை தனி நாடாக ஆக்க வேண்டும் என்று எழும் கோரிக்கை பாகிஸ்தானில் சர்ச்சையை உருவாக்கியுள்ளது.

ஜாமியத் உலமா–இ–பாகிஸ்தான் தலைவர் ஒவைஸ் நூரானி நடத்திய பேரணியில் ஆசாத் பலூசிஸ்தானை உருவாக்குவதாக அறிவித்தார். பலூசிஸ்தான் மக்களை பாகிஸ்தான் அரசு கொள்ளை அடிக்கிறது என அவர் குறிப்பிட்டார்.

சுதந்திர பலூசிஸ்தான் வேண்டி மேலோங்கும் மக்கள் போராட்டத்தினால் பாகிஸ்தானுக்கு மட்டுமின்றி சீனாவிற்கும் பாரிய தலைவலியை கொடுப்பதை களத் தகவல்களின் மூலம் அறியக்கூடியதாகவுள்ளது. கள நிலவரங்களின்படி கடந்த ஜீன் 19 இல் தென்மேற்கு பாகிஸ்தானில் பலுசிஸ்தான் போராளிகளுக்கும் அரச பாதுகாப்புப் படையினருடன் ஞாயிற்றுக்கிழமை நடந்த மோதலில் பலுசிஸ்தான் விடுதலை முன்னணியைச் சேர்ந்த 6 போராளிகள் கொல்லப்பட்டதாக ராணுவ அறிக்கை தெரிவித்துள்ளது.

தென்மேற்கு பாகிஸ்தானில் ஒரு மலைத்தொடரில் கிளர்ச்சியாளர்கள் இருப்பதாக ஒரு ரகசிய தகவலைப் பெற்ற பின்னர் அரச பாதுகாப்புப் படைகள் நடவடிக்கையை ஆரம்பித்தன என்று இராணுவத்தின் ஊடகப் பிரிவான இன்டர் சர்வீசஸ் பப்ளிக் ரிலேஷன்ஸ் **(ISPR)** அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சீனாவிற்கும் தலைவலி?

பாகிஸ்தானில் பலூச் மக்களின் எதிர்ப்பு போராட்டங்களை கண்டு பாகிஸ்தான் இராணுவம் அச்சதில் உள்ளதாக்கவும் கூறப்படுகிறது.

இது சீனாவிற்கும் தலைவலியை அதிகரித்துள்ளது. ஏனென்றால், சீனா பலுசிஸ்தானில் லட்சக்கணக்கான டாலர்களை முதலீடு செய்துள்ளது, இந்த பகுதி சீன புறநகராக மாறி உள்ளது என்றே கூறலாம். இந்த பிராந்தியத்தில் இயற்கை வளங்கள் நிறைந்திருக்கின்றன,



# வலுக்கும் பலூசிஸ்தான் மக்களின் போராட்டம்

இங்கிருந்து தாதுக்களை பிரித்தெடுத்து, பாகிஸ்தானின் பஞ்சாப் மாநிலத்தை வளமாக்கி வருகின்றனர். இதனால், பலூச் மக்கள் நெடுங்காலமாகவே பாகிஸ்தான் அரசை எதிர்த்து வருகின்றனர்.

சீனாவிற்கு நிலங்களை தாரை வார்க்கும் பாகிஸ்தான் அரசின் செயலை எதிர்க்கும் பலூசிஸ்தானில் உள்ள மக்கள், பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ கடத்தப்படுகின்றனர். பின்னர் அவர்களின் சடலங்கள் தான் கிடைக்கின்றன. பாகிஸ்தான் ராணுவத்தின் இந்த மிருகத்தனமான நடவடிக்கைக்கு உள்ளூர் மக்கள் கடுமையாக எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். ஆயினும் பலுசிஸ்தான் மாகாணத்தில் உள்ள




போராளிகள் பாகிஸ்தான் இராணுவத்தை தாக்கி பதிலடி கொடுத்து வருகின்றனர்.

கடந்த மே இறுதியில் பாகிஸ்தான் துணை ராணுவப் படைகளின் மீது நடத்திய தாக்குதலில் 14 அரச வீரர்கள் கொல்லப்பட்டனர். அத்துடன் பலுச்சிஸ்தான் விடுதலையை கோரும் பலுசிஸ்தான் விடுதலை இராணுவம் எப்போதும் சீனா பாகிஸ்தான் பொருளாதார தாழ்வார திட்டமான CPEC திட்டதை எதிர்த்து வருகிறது.

> இந்நிலையில் பலூச்ஸ்தான் சுதந்திரம் வேண்டி தனி நாடு தொடர்பாக பலூச்ஸ்தான் சுதந்திர மன்றம் மிகப்பெரிய அளவில் போராட்டங்களை முன்னெடுத்து வருகிறது. இதில் பலூச்ஸ்தான் ஜனநாயகக் கட்சி, பலூச்ஸ்தான் தேசிய இயக்கம், பலூச்ஸ்தான் மக்கள் கட்சி, நாடு சாரா தேசிய அமைப்பு, அல்வாஸ் அரபு முன்னணி மற்றும் ஏப்ரல் 15 அல்-அவாஸ் உள்ளிட்ட அரசியல் இயக்கங்கள் கலந்து கொண்டுள்ளன.

## பலூசிஸ்தான் தனிநாட்டு போராட்டம்

1947ல் பாகிஸ்தான் மத அடிப்படையில் இந்தியாவை பிரிந்து ஒரு தனி நாடாக உருவானது. ஆனால் உண்மையில் அது வங்காளம், பஞ்சாப், சிந்தி, பலூச்சி, பக்தூன் என ஐந்து தேசிய தேசிய இனங்களைக் கொண்டிருந்தது. மொழி அடிப்படையில் கிழக்கு வங்காளம் போராடி 1971ல் வங்காள தேசமாக மலர்ந்தது.

இராணுவ ஆட்சி, மக்களாட்சி என எதுவாயிருந்தாலும் பாகிஸ்தானில் கோலோச்சுவது பஞ்சாபி முஸ்லீம்களும் சிந்தி முஸ்லீம்களுமே. இவர்கள் பலூச்சிகளையும் பக்தூனியர்களையும் (பத்தானியர்கள்) நீண்ட காலமாக ஒடுக்கி வருகின்றனர். அதனை எதிர்த்துப் பாகிஸ்தானில் அவ்விரு இனங்களும் விடுதலை கோரிப் போராடி வருகின்றன. பொருளாதார ரீதியாக, மற்ற பாகிஸ்தானியர்களுடன் ஒப்பிடும் போது பலூச்சிகள் தனிநபர் வருமானம் மிகக் குறைவு. கட்டமைப்பு ரீதியான பொருளாதாரச் சுரண்டல், சீனா-பாகிஸ்தான் பொருளாதார வழித்தடத்தில் **(CPEC)** இருந்து பெரும்பாலான பலூச் சமூகத்தை விலக்கியது மற்றும் பிற பொருளாதாரத் திட்டங்களில் இருந்து அந்நியப்படுத்துதல் ஆகியவை பலூச் மக்களை போராட்ட வழியில் செயல்படத் தூண்டின.

பலூசிஸ்தான் தனி நாடு கோரிக்கை வலுத்து வரும் நிலையில், அந்நாட்டில் மிகப்பெரிய அளவிலான

மக்கள் போராட்டங்கள் அப்பகுதியில் மட்டுமல்லாமல் பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகளிலும் நடைபெற்று வருகின்றன.






## பலூசிஸ்தான் வரலாறு

பிரிட்டிஷிடம் இருந்து 1947-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 11-ஆம் தேதி பலூசிஸ்தான் பகுதி சுதந்திரம் பெற்றது. இதையடுத்த 1947, டிச.16 -ஆம் தேதி அப்பகுதியை பாகிஸ்தானுடன் இணைப்பது தொடர்பாக பொது மற்றும் மேல்சபை ஆகியவற்றில் தீர்மானம் முன்மொழியப் பட்டது. ஆனால், இதனை இரு சபைகளும் நிராகரித்தன. இந்நிலையில், பலூசிஸ்தான் மீது பாகிஸ்தான் படையெடுப்பு நடத்தியது. காலத் பகுதி கான் மற்றும் அவரது குடும்பத்தினரை சிறை வைத்தது. அப்பகுதியின் முழுக் கட்டுப்பாட்டையும் கைப்பற்றியது. எனவே 1948-ஆம் ஆண்டு முதல் அப்பகுதி பாகிஸ்தானின் முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.

## மறைமுக இந்திய ஆதரவு

பலூசிஸ்தான் விடுதலைப் போராட்டத்துக்கு இந்தியர்கள் தார்மீக ஆதரவு செய்வதாக பலூசிஸ்தான் விடுதலை மன்றமான 'ஹிந்த் பலூச்' எனும் அமைப்பு தெரிவித்துள்ளது. இதுகுறித்து அந்த அமைப்பின் நிறுவனர் ஜிதேந்திரானந்த் சரஸ்வதி கூறுகையில் பலூசிஸ்தான், பிரிட்டிசிடம் இருந்து சுதந்திரம் பெற்றபோதிலும், 1948-ஆம் ஆண்டு மார்ச் மாதம் மீள வலுக்கட்டாயமாக பாகிஸ்தானுடன் இணைக்கப் பட்டது.

பலூசிஸ்தான் மக்களின் சுதந்திர உரிமைகளுக்காக இந்தியர்கள் பங்களிப்பு செய்தனர். தங்களது அடையாளம், கலாசாரம் ஆகியவற்றின் மீது பலூசிஸ்தான் மக்கள் அதிக மரியாதை கொண்டுள்ளனர் என்றும் கூறினார். தற்போதைய சூழலில் சர்வதேச அளவில் இந்தியா முன்னணி நாடாக திகழ்வதால் பாகிஸ்தானில் இருந்து பிரித்து பலூசிஸ்தான் தனிநாடாக அமைக்க இந்தியா உதவ வேண்டும் என இந்த இயக்கம் விரும்புகிறது. இதனிடையே பலூசிஸ்தானில் ஏற்பட்டு வரும் அசம்பாவிதங்கள் தொடர்பாக ஐ.நா. சபையில் இந்தியா தொடர்ந்து கண்டனம் தெரிவித்து வருகிறது.

## பலூசிஸ்தான் போராட்ட சக்திகள்

இந்நிலையில் பலூசிஸ்தான் சுதந்திரம் வேண்டி தனி நாடு தொடர்பாக பலூசிஸ்தான் சுதந்திர மன்றம் மிகப்பெரிய அளவில் போராட்டங்களை முன்னெடுத்து வருகிறது. இதில் பலூசிஸ்தான் ஜனநாயகக் கட்சி, பலூசிஸ்தான் தேசிய இயக்கம், பலூசிஸ்தான் மக்கள் கட்சி, நாடு சாரா தேசிய அமைப்பு, அல்வாஸ் அரபு முன்னணி மற்றும் ஏப்ரல் 15 அல்-அவாஸ் உள்ளிட்ட அரசியல் இயக்கங்கள் கலந்துகொண்டுள்ளன.

பலூசிஸ்தான் விடுதலைப் படை பயங்கரவாத அமைப்பு கிடையாது என்றும் அவர்கள் தங்களின் உரிமைக்காக போராடுபவர்கள். அந்நிய படையெடுப்புகளில் இருந்து தங்கள் நிலத்தை பாதுகாப்பவர்கள். ஆனால், அதனை சர்வதேச பயங்கரவாத அமைப்பாக அமெரிக்கா அறிவித்துள்ளது தவறு என்றும் வாதிடுகின்றனர்.

தங்கள் நிலத்தில் உள்ள வளங்களை கொள்ளையடிக்க நினைக்கும் சீனாவுக்கு எதிராக நாங்கள் தொடர்ந்து போராடி வருகிறோம். அதனால் தான் அரசியல் காரணங்களுக்காக பலூசிஸ்தான் விடுதலைப் படையை சர்வதேச பயங்கரவாத அமைப்பாக அமெரிக்க அறிவித்துள்ளது. பலூசிஸ்தானில் மனித உரிமைகள் அடியோடு பறிக்கப்பட்டுவிட்டன. சிறுமிகள் முதல் பெண்கள் வரை பாலியல் வன்கொடுமைகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர். இளைஞர்கள் படுகொலை செய்யப்படுகின்றனர். பாகிஸ்தான் ராணுவத்தின் தொடர் அத்துமீறல் நடவடிக்கைகளால் இப்பகுதி சுடுகாடாகி விட்டது என பலூசிஸ்தான் சுதந்திர மன்றம் கூறியுள்ளது.

பலுசிஸ்தான் நீண்ட காலமாக பாகிஸ்தானிடம் இருந்து சுதந்திரம் கோருகிறது. மேலும் பல பில்லியன் டாலர்கள் சுரண்டப்படும், சீனாவால் தொடங்கப்பட்ட சீனா-பாகிஸ்தான் பொருளாதார வழித்தடத்தை எதிர்க்கும் பலூச் இனத்தவர்கள், பாகிஸ்தான் இராணுவத்தின் அடக்குமுறை மற்றும் இனப்படுகொலையையும் எதிர்கொள்கின்றனர்.

பலுசிஸ்தான் அரசியல் ஆர்வலர்கள், புத்திஜீவிகள் மற்றும் மாணவர்கள் பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் மற்றும் பாகிஸ்தானிய பாதுகாப்புப் படைகள் மற்றும் இரகசிய அமைப்புகளால் கொல்லப்பட்ட சம்பவங்கள் எண்ணிலடங்காதவை.

ஏராளமான பலூச் இளைஞர்கள் மற்றும் அரசியல் ஆர்வலர்கள் தங்கள் உயிரைக் காப்பாற்ற வெளிநாடுகளுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்

## பலுசிஸ்தான் இனப்படுகொலை

பலுசிஸ்தான் மக்கள் மீது தொடர்ந்தும் இனப்படுகொலை நடத்தப்பட்டு வருகிறது. இப்பகுதி முழுவதும் பாகிஸ்தான் ராணுவத்தின் அராஜகம் கட்டவிழ்க்கப்பட்டுள்ளது. ராணுவத்தால் திடீரென நடத்தப்படும் குண்டுவெடிப்புகளால் நூற்றுக்கணக்கானோர் அப்பாவி மக்கள் உயிரிழக்கின்றனர். இந்நிலையில், பலூசிஸ்தானில் நடைபெறும் கொடுமைகளை, மக்கள் விரோத நடவடிக்கைகளை வெளிப்படுத்தும் விதமாகவும், அதற்கு எதிரான மற்றும் தனிநாடு போராட்டங்களை




தீவிரப்படுத்தி சர்வதேசமெங்கும் பாகிஸ்தானுக்கு எதிரான பலூசிஸ்தான் மக்களின் சுதந்திர கோஷங்கள் ஓங்கி ஒலித்து வருகின்றன.

## பலுசிஸ்தானில் இசுலாமியப் படையெடுப்புகள்

இசுலாமிய மதம் பரப்புவதற்காக, கிபி ஏழாம் நூற்றாண்டில் பாரசீகத்தை கைப்பற்றிய அரேபியர்கள் பலுசிஸ்தான் மீது படையெடுத்து, பலூச்சி மக்களை இசுலாமிற்கு மதம் மாற்றினர். கிபி பத்தாம் நூற்றாண்டு வரை அரேபியர்கள் ஆட்சி பலுசிஸ்தானில் அமைந்தது. கிபி 13ம் நூற்றாண்டில் செங்கிஸ் கானின் மங்கோலியப் பேரரசில் இருந்த பலுசிஸ்தான், 14ம் நூற்றாண்டில் தைமூர் பேரரசில் சென்றது. கிபி 15ம் நூற்றாண்டு முதல் முகலாயப் பேரரசில் ஒரு பகுதியாக

பலுசிஸ்தான் இருந்தது. கிபி 17–ஆம் நூற்றாண்டில் முதல் 1948 முடிய பலுசிஸ்தான், பிரித்தானிய இந்தியா அரசின் கீழ் ஒரு சமஸ்தானமாக விளங்கியது.

### 1948 இல் முகமது அலி ஜின்னா ஆட்சி

1948 பாகிஸ்தான் அரசமைப்புச் சட்டப்படி, பலுசிஸ்தான் மன்னராட்சிப் பகுதி, பாகிஸ்தான் ஒன்றியத்துடன் இணைக்கப்பட்டது. பாகிஸ்தான் அதிபர் முகமது அலி ஜின்னாவும், அவருக்குப் பின் வந்தவர்களும், பலுசிஸ்தானை 1955ல் கலைத்தனர், பாகிஸ்தான் அரசு அறிமுகப்படுத்திய ஒரு நாட்டுக் கோட்பாட்டினால், பலுசிஸ்தான் பழங்குடி மக்களுக்கு மைய அரசில் போதுமான பிரதிநிதித்துவம் கிடைக்காத காரணத்தினால், நவாப் நெளரோஸ் கான் குழுவினர், பாகிஸ்தான் அரசுப் படைகளுக்கு எதிராக 1958 முதல் 1959 முடிய ஆயுதமேந்தி கொரில்லாப் போரில் ஈடுபட்டனர். இறுதியாக நவாப் நெளரோஸ் கான் குழுவினரை சிறை பிடித்து தூக்கிலிட்டு, பலுசிஸ்தானியர்களின் கிளர்ச்சியை அடக்கினர்.1960களில் தனி பலுசிஸ்தான் நாடு கோரிக்கையை முன்வைத்து போராட்டம் வெடித்தது. பாகிஸ்தான் அரசுப்படைகளுக்கு எதிராக 1963 முதல் 1969 முடிய கொரில்லாப் போர் நடைபெற்றது. பலுசிஸ்தானியர்களின் தொடர் எதிர்ப்பின் காரணமாக, 1970ல் பாகிஸ்தான் அதிபர் யாகியா கான் ஒரே நாடு, ஒரே அரசு என்ற ஒரு அலகு கோட்பாட்டை கைவிட்டு, பலுசிஸ்தானை பாகிஸ்தானின் ஒரு மாகாணமாக அங்கீகரிப்பட்டதுடன், அனைத்து மாகாணங்களுக்கும், மைய அரசின் அதிகாரங்களைப் பிரித்து வழங்கினார்.

### அலி பூட்டோ காலத்தில்

1973ல் பாகிஸ்தான் அதிபராக இருந்த சுல்பிக்கார் அலி பூட்டோ, பலுசிஸ்தான் மற்றும் கைபர் பக்துன்வா மாகாண அரசுகளை கலைத்து இராணுவ ஆட்சியை கொண்டு வந்தார். இதனால் தனி நாடு கோரி, மீர் அசர் கான் ராம்கனி தலைமையில் பலுசிஸ்தான் மக்கள் விடுதலைப் படை என்ற ஆயுதமேந்திய அமைப்பு தோன்றிது. பலுசிஸ்தான் கொரில்லாப்படைகளுக்கும், ஈரான் உதவியுடன் கூடிய பாகிஸ்தானிய இராணுவத்திற்கு இடையே நடைபெற்ற மோதல்களில், பாகிஸ்தான் இராணுவ வீரர்களில் 300 – 400 வரையும், பலுசிஸ்தான் கொரில்லா வீரர்கள் மற்றும் பொதுமக்களில் 7,300 – 9,000 வரை கொல்லப்பட்டனர்.

2004ல் பலுசிஸ்தான் தனி நாடு கோரும் புரட்சிப் படையினரால், சீனாவின் உதவியுடன் கட்டப்பட்டுக் கொண்டிருந்த குவாதார் துறைமுகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த மூன்று சீனர்கள் கொல்லப்பட்டனர், நான்கு பேர் காயமடைந்தனர். 2005ல் பலுசிஸ்தான் அரசியல் தலைவர்கள் நவாப் அக்பர் கான் புக்தி மற்றும் மீர் பாலச் மர்ரி ஆகியோர் பாகிஸ்தான் அரசுக்கு 15 அம்ச கோரிக்கையை அனுப்பினர். 15 அம்ச கோரிக்கையின் முக்கியமானது, பலுசிஸ்தானில் கிடைக்கும் கனிம வள வருவாயில் கனிசமான பங்கு பலுசிஸ்தான் மாகாண அரசுக்கு வழங்குதல் மற்றும் பலுசிஸ்தானில் உள்ள இராணுவ கட்டமைப்புகளுக்காக, பலுசிஸ்தான் மாகாணத்திற்கு பெருந்தொகை வழங்க ஈட்டுத்தொகையாக வேண்டும் என்பதே.

### பெர்வேஸ் முஷாரஃப் ஆட்சியில்

ஆகஸ்டு 2006ல் புரட்சிப்படைத் தலைவர் நவாப் அக்பர் கானை பிடிக்க வந்த, இராணவ வீரர்களில் 60 பேர் மற்றும் 7 இராணுவ அதிகாரிகள் கொல்லப்பட்டனர். பாகிஸ்தான் அதிபர் பெர்வேஸ் முஷாரஃப்பின் கட்டளையால் பலுசிஸ்தான் பகுதிகளில் குண்டு மழை பொழிந்தது. குண்டு வீச்சில் பலுசிஸ்தான் விடுதலைப் படைத் தலைவர் நவாப் அக்பர் கான் கொல்லப்பட்டார்.

3 ஏப்ரல் 2009ல் பலூசிஸ்தான் தேசிய இயக்கத் தலைவர் குலாம் முகமது பலூச் மற்றும் அதன் இரண்டு துணைத் தலைவர்களையும், கை விலங்கிட்டு, கண்களை துணியால் மூடி சரக்கு வாகானத்தில் அடையாளம் தெரியாதவர்களால் தூக்கிச் செல்லப்பட்டனர்.ஐந்து நாள் கழித்து 8 ஏப்ரல் 2009ல் கடைவீதியில் துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்த மூவரின் உயிரற்ற சடலங்கள் கடைவீதியில் கண்டெடுக்கப்பட்டது.

### சீனாவின் நட்புக்கரம்

இப்போது பாகிஸ்தானிற்கு பலுச்சிஸ்தான் பிரச்சனை பெரிய பிரச்சனையாக உருவெடுத்துள்ளது. பாகிஸ்தானில் உள்ள பலுசிஸ்தான் மாகாணத்தை தனி நாடாகப் பிரிக்கக் கோரும் இவர்களின் போராட்டத்தை நசுக்குவதில், சீனாவும் நட்புக்கரம் நீட்டிவருவது குறிப்பிடத்தக்கது.

பலுசிஸ்தானில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்துக் கணிப்பில் 377 மக்கள் தனி பலுசிஸ்தான் நாடு கோரிக்கைக்கு வாக்களித்தனர்.

பலுசிஸ்தானின் மோதல்களைத் தீர்க்க அரசியல் பேச்சுவார்த்தை மட்டுமே ஒரே வழி என்றும், பலுசிஸ்தானின் முக்கிய பிரச்சினைகள் அரசியல் மற்றும் பொருளாதாரம், பரஸ்பர புரிதல், சமரசம் மற்றும் பலூச்சின் உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிப்பதில் கவனம் செலுத்த வேண்டும். பொய்யான வாக்குறுதிகள் நிலைமையை மேலும் மோசமாக்கும். பாகிஸ்தான் அரசு ஸ்திரத்தன்மையையும் ஒருமைப்பாட்டையும் விரும்பினால் மக்களின் கோரிக்கைகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும் எனவும் சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

**"பலுச்ஸ்தான் நீண்ட காலமாக பாகிஸ்தானிடம் இருந்து சுதந்திரம் கோருகிறது. மேலும் பல பில்லியன் டாலர்கள் சுரண்டப்படும், சீனாவால் தொடங்கப்பட்ட சீனா–பாகிஸ்தான் பொருளாதார வழித்தடத்தை எதிர்க்கும் பலூச் இனத்தவர்கள், பாகிஸ்தான் இராணுவத்தின் அடக்குமுறை மற்றும் இனப்படுகொலையையும் எதிர்கொள்கின்றனர்."**



# நெஞ்சம் சுமந்த வலி!



பொழில்

பச்சைத் துரோகத்திற்கு
இன்னுமொரு பெயர்
பாரத தேசம்.
முதுகிற் குத்திய
வலியின் ரணம்
ஒவ்வொரு மாதமும்
ஏதோவொரு வழியில்
குத்திக் கிழிக்கும்!
இம் மாதம்
திலீப மாதம்!!

உலகம் முழுவதையும்
பட்டினி சூழ்கிறதாம்
பத்திரிகைகளில்
பத்தி பத்தியாகச் செய்திகள்.

உள்நாட்டுப் போர்
நாடுகளுக்கிடையில்
நாட்டாமைப் போர்
பூமிப்பந்தை வளைத்துப் போட்ட
பெருந்தொற்று
கார்ப்பரேட்காரரின் கைங்காரியத்தால்
காணாமற் போன விளை நிலங்கள்..,
நடுத் தெருவில்
நிறுத்தப்பட்ட விவசாயிகள்..
பஞ்சத்திற்கும் பஞ்சாயத்திற்கும்
ஆயிரம் காரணங்கள்!!

தாய்மண்ணைப் பூசித்த
ஒரேயொரு காரணத்தால்,
இலட்சோப இலட்சம் பேர்
நலமாய் வாழ்வதற்காய்,
புசிக்க மறுத்தவன்

நீரையும் துறந்தவன்..
ஒரு புனிதன் - அவன்
வரலாறு எழுதிய
புரட்டாதி மாதம் - அது
காலம் கடந்தும்
நினைவில் நிலைக்கும்!!

இங்கு..
காலி வயிற்றுடன்
எரிபொருளுக்காக எழுந்த
ஒரு போராட்டம்..
களனியில் பிணங்களும்
கைதுகளும்
காணாமற் போதல்களுமாக
முடிவைத் தொட்டது.
பொருளை நேசித்துப்
போராடியவர்கள்
நாட்டை நேசித்திருந்தால்?
நிலைமையே வேறு
இப்போ
சோத்துச் சண்டை
சோகமாய் முடிய
யார் யாரெல்லாமோ வந்து
நாட்டாமை காட்டுறார்..

தார்மீக உரிமைகள்
தொடர்ந்தும் மறுக்கப்படும்
எங்கள் தாய்மடி..
விளை நிலங்கள் கூட
இங்கு
விகாரைக்குச் சொந்தம்
என்றால்..
நீதி தேவனின்
வார்த்தைக்கு
மதிப்புத்தான் என்ன?

தாய்நில வேள்வி
தரிசாக்கப்பட்டதை
சாக்காக வைத்து
அந்நிய பூமியாகுது
எம் நிலம்!
அயல் நாடுகளில் தவிக்குது
எங்கள் இனம்!!

பாவிகள் காலடி
படாமல் காக்க
எத்தனை விருட்சங்கள்
தம்மைத் தந்தன?
வீட்டுக்கு ஒருவரை
விதைத்த பின்னும்
வாளாவிருத்தல் தகுமா?

எங்களை விடுவிக்க
யார்யாரோ வருவார்
நாடுகள் கூடி
நல்லது செய்யும்
எங்களுக்காக
யாரோ உழுவார்
விதைப்பார்
கதிர் அறுப்பார் என்று
இன்னமுமா
காத்துக் கிடக்கிறோம்?

பகற் கனவிடை கழிந்த
காலங்கள் போதும்!!
நல்லூரில் தனைக்
கொடுத்தவன்
சாட்சியாக
நல்லதொரு சமுதாயம்
தனைப் படைக்க
வேண்டாமா?
எழுவீர்!! எழுவீர்.!!







**சிந்திக்க ஒரு குட்டிக் கதை**

# பிள்ளைகளை வெளி உலகத்தை தானாக உணர வழி விடுங்கள்



வட அமெரிக்காவில் ஒரு பறவை இனம் அழிந்து வந்தது. அதைப் பாதுகாக்க அந்த நாட்டு அரசாங்கம் முடிவு செய்தது. அதற்காக உயிரியல் பூங்காவில் தனியாக ஒரு அறை அமைக்கப்பட்டு பாது காக்கப்பட்டது.

அந்தப் பறவைக்கு தனிப் பாதுகாவலர், தனி உணவு. அதற்குத் தேவையான அனைத்து வசதிகளும் செய்து தரப்பட் டன. கோடைக் காலத்தை சமாளிக்க தனி யாக குளிர் அறையும் அமைக்கப்பட்டது.

அந்தப் பறவை இனம் பெருகியது. பின்னர் வெளி உலகத்துக்கு சுதந்திரமாக பறக்க விடப்பட்டது. அதற்கு தன் எதிரிகள் யார் என்று தெரியவில்லை. அதனால் அந் தப் பறவை எதிரிகளுக்கு உணவானது.

அந்தப் பறவைக்கு மின் கம்பங்களில் எப்படி அமர்வது என்றுகூடத் தெரிய வில்லை.

எதிரிகளுக்கு உணவாகியும், மின் கம் பங்களில் சிக்கி கருகியும், வண்டிகளில் மோதியும் அந்தப் பறவைகள் கூட்டம் கூட்டமாக அழியத் தொடங்கின. எந்த இனம் அழியக் கூடாது என்று அரசினால் பெருமுயற்சி எடுக்கப்பட்டதோ, அவர்கள்



எடுத்த பாதுகாப்பு முயற்சியே அந்த இனத் தின் அழிவிற்கும் காரணமானது.

அதே போல் தான் நாமும். நமக்கு கிடைக்காதவை அனைத்தும், நம் பிள்ளை களுக்கு கிடைக்கட்டும் என்று கொடுத்து நாம் அழகு பார்க்கிறோம்.

**உங்கள் பிள்ளைகளை வெளி உலகத்தை தானாக உணர வழி விடுங்கள். நல்லது கெட்டதை தானாக கற்றுக் கொள்ளட்டும். நம் பிள்ளைகளுக்கு அதிகம் செல்லம் கொடுத்து விட்டோம், அவன்/அவள் வெளி உலகத்தை எப்படி சமாளிக்கப் போகிறார்கள் என்கிற சந்தேகம் உங்களுக்கு வேண்டாம்.**



அவர்களுடைய அழிவுக்கும் நாமே உறுதுணையாய் இருக்கிறோம். பூங்காவில் இருக்கும் விலங்குக்கு வேட்டையாடத் தெரியாது. அதே போல் தான் அதிகம் செல்லம் கொடுக்கும் பிள்ளைகளால் தோல்விகளை நிச்சயமாகத் தாங்க முடியாது.

உங்கள் பிள்ளைகளை வெளி உலகத்தை தானாக உணர வழி விடுங்கள்.

நல்லது கெட்டதை தானாக கற்றுக் கொள்ளட்டும். நம் பிள்ளைகளுக்கு அதிகம் செல்லம் கொடுத்து விட்டோம், அவன்/அவள் வெளி உலகத்தை எப்படி சமாளிக்கப் போகிறார்கள் என்கிற சந்தேகம் உங்களுக்கு வேண்டாம்.

நீங்கள் கற்றுக் கொடுக்க மறந்த பாடத்தை, இந்த சமூகம் மற்றும் இயற்கை கற்றுக் கொடுக்கும். எப்படி எனக்கும், என்னை போல் பலருக்கும் கற்றுக் கொடுத்ததோ அதே போல. இதைத் தான் ஆங்கிலத்தில்

Survival Of Fittest என்று நாம் சொல்லுகிறோம். அதை நோக்கித் தான் எல்லா மானிடப் பிறவிகளும் ஓடிக் கொண்டு இருக்கின்றன.



# அன்புள்ள அப்பா

*அன்புள்ள அப்பா.!!*
*உன் நீண்ட*
*பயணத்தின் பின்*

*மழலைப் பருவத்தில்*
*உனக்காக நான்*
*சேர்த்த*
*முத்தங்கள் எல்லாம்*
*உனைத் தொட்டிட*
*துடிக்கின்றன*

*மனச்சிறையுடைத்து*
*துள்ளிப்பாய்ந்த*
*ஆசை*
*முத்தங்கள்*
*கணனித் திரையுடன்*
*முட்டிமோதி*

*மீண்டும்..*
*வலிபட்டு*
*துடிக்கிறது*
*உன் வருகைக்காய்..*

**மிதுயா கானவி**



# படித்ததில் பிடித்தது...



இராமன் தன் மனைவியை சந்தேகித்து தீயில் இறங்க பணிக்கிறான். அவளும் தீயில் இறங்கி, தான் பத்தினி என்பதை சொல்கிறாள். அதற்கு பிறகு கூட ஊராரின் சந்தேகத்தை காரணங் காட்டி கர்ப்பிணியான தன் மனைவியை வனத்தில் தள்ளுகிறார் கணவன்.


அங்கேயே குழந்தைகள் பெற்று வனத்திலேயே வாழ்கிறாள், இரண்டு குழந்தைகள் வளர்ந்து ஊர் திரும்பியதும் மடிகிறாள்.

**'இது ராமாயணம்'**

ஓர் அழகிய இளம் மங்கை. அவளுக்கு முதிர்ந்த கணவன். மனமுவந்து வாழ்கிறாள். ஒரு கட்டத்தில் கணவன் குஷ்டரோகியாகிறான். அதன் பிறகும் அவளுக்கு வெறுப்பு ஏற்படவில்லை. பண்ணாத குசும்பெல்லாம் அக் கிழடு செய்தும் அவனை ஆராதிக்கிறாள். ஒரு கட்டத்தில் ஒரு தாசியை பார்த்து 'நான் இவளோடு கூட வேண்டும்' என்கிறான். அதற்கும் அவள் இசைகிறாள்.

தாசிக்கு கூலியாக தாசியின் வீட்டை துப்புரவு செய்வது உள்ளிட்ட பணிகளை செய்கிறாள். தன் கணவனை தோளில் தூக்கிச் சென்று தாசியின் வீட்டுக்குச் செல்கிறாள்.

**'இது நளாயினி கதை.'**



இவை அனைத்தும் வட மொழிஇலக்கியங்கள். தன் கணவனை செய்யாத குற்றத்திற்காக கொலை செய்து விட்டது அரசு.

தன் கோப தீயால் ஒரு நகரத்தையே எரிக்கிறாள் ஒருத்தி. தன் உள்ளத்து எரிச்சல் பற்றி எரிகிறது என கெக்கலியிட்டு சிரிக்கிறாள். ஆவேசமாக, எரித்தபடியே வேகமாக நடந்து சென்று, சற்று நிதானித்து திரும்பிப் பார்க்கிறாள், அனைத்தும் எரிந்து விட்டதா அல்லது இன்னும் மிச்சமிருக்கிறதா என்று.

**'இது சிலப்பதிகாரம்'**

அவள் ஓர் பேரழகி. அவள் அழகில் கவரப்பட்டு ஓர் இளவரசன் தன் காதலை அவளிடம் கூறுகிறான். அவள் வலக் கையில் வாங்கி இடக் கையில் தூர வீசிவிட்டு சலனமற்று நடக்கிறாள். இளவரசனும் ஆசிட்

வீசவில்லை, ஆபாச படமெடுத்து மிரட்டவில்லை. அவள் உணர்வுக்கு மதிப்பளித்து சென்று விடுகிறான்.

**'இது மணிமேகலை'**



# படித்ததில் பிடித்தது...

அவள் கணவன் அவளை கொல்வதற்காக திட்டமிட்டு மலை உச்சிக்கு அழைத்துச் செல்கிறான். அவளும் விவரமறியாது கூடவே செல்கிறாள்.

மலை உச்சியை எட்டியதும்தான் தெரிகிறது, இவன் தன்னை கொலை செய்ய அழைத்து வந்திருக்கிறான் என்று. யோசிக்கிறாள். இறுதியாக கணவனிடம் பேசுகிறாள்,

'நீ என்னை கொல்லத்தானே அழைத்து வந்திருக்கிறாய்? நான் மடிவது பற்றி எந்த கவலையுமில்லை. ஒரே ஒரு வேண்டுகோள்தான். என் கணவர் நீங்கள். உங்களை மூன்று முறை சுற்றி வந்து காலில் விழுந்து ஆசி வாங்கினால் மோட்சம் செல்லும் பாக்யம் கிட்டும் எனக்கு.

'அட அதனாலென்ன? தாராளமாக சுற்றி வா' என்று கணவனும் சொல்ல, சுற்றுகிறாள்..

முதல் சுற்று, இரண்டாம் சுற்று, மூன்றாம் சுற்றில் தன் கணவனை மலையிலிருந்து கீழே தள்ளி விட்டு கொல்கிறாள்.

**'இது குண்டலகேசி'**







இவை அனைத்தும் தமிழ் இலக்கியங்கள்.

ஓர் ஆண் என்ன செய்தாலும் அவனுக்கு சேவகம் செய்வதொன்றே பெண்ணின் பணி என்பதினை சொன்னது வடமொழி இலக்கியங்கள்.

அவன் ஆணோ, கணவனோ, அரசனோ, ஆண்டவனோ அநீதி என்றால்,

அறம் தவறினால் அடங்காதே, அவனை எதிர்த்து போராடு என்பதை போதித்தன தமிழ் இலக்கியங்கள்.

தமிழ் மொழி எப்போதுமே பெண்களை கொண்டாடுவது. உலகம் முழுவதுமே பெண்களைக் காலுக்கு கீழே வைத்திருந்த கால கட்டத்தில் பெண்களை மேன்மை மிகு பொக்கிஷமாக போற்றிப் புகழ்ந்தது தமிழ் சமூகம்.

சங்ககாலத்திலேயே, 47 பெண் எழுத்தாளர்களைக் கொண்டது உலகிலேயே தமிழ் சமூகம் மட்டும்தான். உலக மொழிகளின் தாய் என்று கூறிக் கொள்ளும் கிரேக்கத்தில் கூட 7 பெண்கள் தான் உண்டு.

தேவபாஷை என்று கூறிக் கொள்ளும் சமஸ்கிருதத்தில் ஒரு பெண் எழுத்தாளர் கூட கிடையாது. ஏன்? சமஸ்கிருதத்தை வாசிக்கவோ, பேசவோ கூட பெண்களுக்கு உரிமை கிடையாது.

ஆனால், கீழடி போன்ற இடங்களில் இருந்து கிடைத்ததில் தங்கத்திலும், பானை ஓடுகளிலும் பெண்களின் பெயரைப் பொறித்து புழங்குமளவிற்கு தமிழ் சமூகம் நாகரீகம் கொண்டது.

ஆண்டாண்டு காலமாக பெண்களை போற்றிப் புகழ்ந்து கொண்டாடியது நம் தமிழ் சமூகம். தமிழ் சமுதாயம் இன்றும் நிலைத்து இருப்பதற்கு காரணம் பெண்களைக் கொண்டாடியதால் தான். பெண்கள் உலகத்தின் ஆணிவேர்கள். அவர்களைக் கொண்டாடுவோம்.

புனித பிரியா (நுவரெலியா)



# உள்நாட்டுக் கடன் மறுசீரமைக்கப்பட்டால் மத்திய வங்கி திவாலாகும்



இலங்கையைச் சேர்ந்த பலர் தாமரை கோபுரத்தின் உச்சிக்கு சென்று கொழும்பின் அழகை பார்த்து ரசிப்பது ஒருவித மகிழ்ச்சி தான்.

ஏனெனில், இது சீனாவிடமிருந்து 88.6 மில்லியன் டொலர் கடனில் [மொத்தம் 104.3 மில்லியன் டொலர்கள்] உருவாக்கப்பட்டது என்பது அந்த பார்வையாளர்களுக்குத் தெரியாது. இதில் 80% சீனக் கடன். 20% தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை அதிகார சபையினால் செலவு செய்யப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி சிறிசேன தமது பதவி காலம் நிறைவடைந்து வீட்டிற்கு செல்ல இருந்த நிலையில் சரியாக 2019 செப்டெம்பர் 16ம் திகதி அவசரமாக அரைவாசி நிர்மாணிக்கப்பட்டிருந்த கோபுரத்தை திறந்து வைக்க வந்து சொன்ன கதைகள் பார்வையாளர்கள் பலருக்கு மறந்து இருக்கக்கூடும். அவர் கூறியதாவது, அந்த கோபுரத்தை நிர்மாணிப்பதற்கு ஒப்பந்தம் செய்த சீன நிறுவனத்திற்கு (ALIT) இலங்கை அரசாங்கம் 2 பில்லியன் ரூபாய் கொடுத்தாலும், அப்படி ஒரு நிறுவனம் சீனாவிலோ அல்லது சீனாவுக்கு வெளியேயோ இல்லை என சீன அரசாங்கம் அறிவித்ததாக தான். இந்த ஒப்பந்தம் ஜனவரி 2012 இல் கைச்சாத்திடப்பட்டது. அப்போது இலங்கையின் ஜனாதிபதியாக இருந்தவர் யார் என்று சொல்லத் தேவையில்லை என நினைக்கிறேன். அந்தப் பணத்தை பூதம் விழுங்கிவிட்டது என்று வைத்துக் கொள்வோம். அப்போது புரியும். ஆனால் அந்த கோபுரம் எதற்காக கட்டப்பட்டது என்று உங்களில் எத்தனை பேருக்கு தெரியும்? அதற்கு கொண்டு வந்த



அண்டனா எங்கிருக்க கூடும்? மேலும் அங்கு சென்று பார்வையிடும் அனைவரும் தனி தனியாக 16 இலட்சம் ரூபாவிற்கு மேல் இதுவரை கடன்காரர்களாக்கியது. இது மாதிரியான கொங்கிரீட் கோபுரங்கள், விளையாட்டு மைதானங்கள், செயலமர்வு அரங்கங்கள், ஆறு வழி வீதிகள் நிர்மாணிக்க ராஜபக்சக்கள் மற்றும் விக்ரமசிங்கக்களின் அரசாங்கத்தினால் எடுத்த அமெரிக்கன் டொலர் பில்லியன் 100.9 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடனுக்காக என்பது அவர்களுக்கு தெரியுமா? எவ்வாறாயினும், இலங்கையில் மக்களுக்கு அவ்வளவு தூரம் பொருத்தம் இல்லை. அது அவர்களுக்கு இன்னும் சில மாதங்களில் பொருத்தமாக மாறும். இங்கு பெரஹெரவில் கசையடிக்காரர்கள் தான் வருகின்றனர். ஓகஸ்ட் மாதம் வரை பணவீக்கம் இன்னும் 64.3% ஆக இருக்கிறது, உணவு தட்டுப்பாடு 90.9% ஆக இருக்கிறது. இந்தியாவில் ரேஷன் அரிசி கொடுப்பது போல மக்களுக்கான எரிபொருள் விநியோகம், விலைவாசி உயர்வின் காரணமாக இரண்டு வேளை உணவைத் தவிர்த்து ஒருவேளை மட்டும் உண்ணுதல், ஐந்து பிள்ளைகளுக்கு ஒருவர் மந்தபோஷணையினால் பாதிக்கப்படல், பொருளாதாரம் -8.5% வீழ்ச்சி, ஐம்பது இலட்சம் போல வேலைவாய்ப்புக்களை இழக்க நேரிட்டமை போன்ற சிறு சிறு விடயங்கள் பல, இலங்கை மக்கள் அவற்றை பெரிதாக கருத்திற்கொள்வதில்லை. ஆனால் இன்னும் கொஞ்ச நாட்களில் தான் ஆட்டுவித்தவர்கள் எல்லாரும் வருவார்கள். அப்போது தாமதமாக வந்து விட்டார்கள் என்று எண்ணுவரோ தெரியவில்லை. ஒன்று இது நாங்கள் வாங்கி வந்த வரம் என்று சொல்லுவார்கள். நம் மக்கள் என்னவாக இருந்தாலும் அதை கடவுள் தலையில் போட்டு அழகு பார்ப்பதில் திறமைசாலிகள்.

இலங்கையின் கடன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன், 2021 ஏப்ரல் வரை 100.9 டொலர் பில்லியன். வெளிநாட்டு கடன் முழு தொகை 60 பில்லியன் டொலரில் 22 பில்லியன் டொலர் போல தான் இலங்கை மறுசீரமைக்க எதிர்பார்த்துள்ளது. மறுசீரமைப்பு என்பது கடன் தள்ளுபடிக்கான 'ஸ்மார்ட்' வார்த்தையாகும். இலங்கை அரசாங்கம் 50% கடன் தள்ளுபடி செய்ய கடன் கொடுனர்களை சம்மதிக்க வைக்க வேண்டும் என்பதையே எதிர்பார்க்கின்றது. அப்படி ஒப்புக்கொண்டால், நாம் 2025 க்குள் 11 பில்லியன் டொலர்களை செலுத்த வேண்டும். அதற்காக, இலங்கை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட நிதி மற்றும் சட்ட ஆலோசகர்கள் (Lazard and Clifford Chance LLP) தற்போது கடன் வழங்குநர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். என் அறிவுக்கு எட்டிய வகையில், அவர்கள் தற்போது ஐந்து பெரிய சவால்களை எதிர்கொண்டுள்ளனர். அவையாவன...

1. 50% கடன் தள்ளுபடி செய்வதற்கு கடன் வழங்குபவர்களை ஒப்புக் கொள்ள வைத்தல்.

2. சீனா அவர்களின் கடனில் 50% கிட்டத்தட்ட 8 பில்லியன் டொலர் தள்ளுபடி செய்ய ஒப்புக்கொள்ள வேண்டும்.

3. அமெரிக்காவின் ஹெமில்டன் ரிசர்வ் வங்கியால் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஒரு தீர்விற்கு கொண்டு வருதல் மற்றும் வேறு ஏதும் வழக்குகள் தொடராமல் தடுத்தல்.

4. அனைத்து இருதரப்பு கடன் வழங்குநர்களையும் (பாரிஸ் கிளப், சீனா மற்றும் இந்தியா) மற்றும் நிதிச் சந்தையில் பெற்றுள்ள கடன் (ISBs) வழங்குனர்கள் அனைவரும் ஒரே சதவீதத்தில் கடனைத் தள்ளுபடி செய்ய ஒப்புக் கொள்ள வேண்டும்.

5. உள்நாட்டு கடன் மறுசீரமைப்பிற்காக (கடன் தள்ளுபடி செய்வதற்காக) வெளிநாட்டு கடன் கொடுனர்கள் இலங்கை அரசாங்கத்தை வற்புறுத்துவதில் இருந்து தடுத்தல்.

எந்த ஒரு காரணத்திற்காகவும் வெளிநாட்டு கடன் கொடுனர்கள் கேட்டு கொண்டால் உள்நாட்டு கடனையும் 50% இல் கடன் தள்ளுபடி செய்ய வேண்டும் அப்படி இல்லை என்றால் எமக்கு கடன் தள்ளுபடி செய்வதற்கு சம்மதிக்க முடியாது என்றால், அதன் போது என்ன மாதிரியான விளைவுகள் ஏற்படும் என்பதை கற்பனை செய்து கூட பார்க்க முடியாது. அப்போதும் நம் நாட்டு மக்கள், கடன்பட்டாலும் என்ன தாமரை கோபுரத்தின் உச்சியில் ஏறி சிவனொளிபாத மலையை பார்த்து புண்ணியம் பெற வழி வகுத்த நம் தந்தை ராஜபக்சவுக்கு மேலும் மேலும் தங்கம், வெள்ளி, முத்துக்கள் கிடைக்க வேண்டும் என இறை பிரார்த்தனை செய்வார்கள்.

இலங்கை மத்திய வங்கியின் மூலதனம் 400 பில்லியன் அளவில் ஆகும். தற்போது மத்திய வங்கி அரசாங்கத்திற்கு பெற்றுகொடுத்துள்ள கடன் 2.3 டிரில்லியனுக்கு கொஞ்சம் அதிகம். வெளிநாட்டு கடன் சுமார் 6 பில்லியன் டொலர் ஆகும்.

எந்த விதத்திலும் உள்நாட்டு கடன் 10% இல் தள்ளுபடி செய்




தாலும் சுமார் 230 பில்லியன் வரை ஆவதுடன், 20% இல் தள்ளுபடி செய்தால் 460 பில்லியன் வரை ஆகும். அப்போது மத்திய வங்கியின் மொத்த மூலதனம் ஆவியாகி போய்விடும். மத்திய வங்கியை திவாலாக்குவதற்கு வழிவகுத்த ராஜபக்சக்கள், விக்ரமசிங்கக்கள் அன்று என்ன செய்வார்களா இருக்கும்? அர்ஜுன மகேந்திரன், கப்ரால், ஜயசுந்தர, ஆட்டிகல, லக்ஷ்மன் ஆகியோர் எங்க போய் ஒளிந்து கொள்வார்களா இருக்கும்? ஆனால் எதுக்காக பயப்படனும்? இந்த நாட்டில் உள்ள நம் மக்கள் அதற்கு எல்லாம் உடனடியாக மன்னிப்பு கொடுத்து விடுவார்கள்.

அதே விதத்தில் பிரதான இரு அரச வங்கிகள், தேசிய சேமிப்பு வங்கி, காப்புறுதி கூட்டுத்தாபனம், ஊழியர் சேமலாபநிதி உள்ளிட்டவற்றுக்கு என்ன நடக்குமாக இருக்கும்? இது எல்லாம் தெரியாமல் நம் தாய் நாடு எப்படி இருக்க கூடும்? அது வரை நாம் ஆடுவோம், பாடுவோம், எல்ல, உலகமுடிவு. சுற்றுலாத்தளங்களுக்கு சுற்றுப்பயணம் போவோம் நமக்கு என்ன கவலை. கடைசியில் வேறு என்ன செய்வது விதி விட்ட வழியே வாழ்க்கையை நடத்துவோம் என்று மனதை தேற்றி கொள்வோம்.

அங்கம்: 05




# வங்கம் தந்த பாடம்

சதி செய்யவோ அல்லது ஆட்சியைக் கவிழ்க்கவோ மக்கள் யாருக்கும் அதிகாரம் வழங்கவில்லை. 1976ம் ஆண்டு ஆவணி 15ம் திகதியன்று, இராணுவத்தின் ஒரு பகுதியினரும் அதிகாரிகள் குழுவொன்றும் இணைந்து ஷேக் முஜிப்பைக் கொன்றனர். அன்று அதிகாலையில் இரண்டாவது பீரங்கிப் படையைச் சேர்ந்த ஒரு அதிகாரி என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டிருந்தார். அவர் மேஜர் ரஷித் தந்ததாக ஒரு செய்தியைக் கூறினார். அத்துடன், ஷேக் முஜிப் கொல்லப்பட்ட செய்தியையும் அவரே கூறினார். மறைந்த ஜனாதிபதியின் நெருங்கிய சகாவான கொண்டாக்கர் முஸ்டாக் அகமது [ இவர் அவாமி லீக்கின் அங்கத்தவர் ] அதிகாரிகளுக்குத் தலைமை தாங்குவதையும் அவர் சொன்னார்.

நான் வானொலியைக் கேட்டபோது ஷேக் முஜிப் கொலை செய்யப்பட்டதாகவும் கொண்டாக்கர் முஸ்தாக் ( Kondkaar Mustaque ) அதிகாரத்தைக் கைப்பற்றியதாகவும் அறிந்தேன். இது, அரசியல் நிலையாமைக்கு வழி வகுக்கும் என்றும், இதனால் நாம் எமது செல்வாக்கை இழந்து போகலாம் என்றும் யோசித்தேன். அதே நேரத்தில் பல தொலைபேசிச் செய்திகள் என்னை பங்களாதேஷ் வானொலி நிலையத்துக்குச் செல்லுமாறு கூறின. எனவே, நான் அங்கு சென்று நிலைமையை ஆராய யோசித்தேன்.

அதிகாலை 9 மணிக்கு நான் வானொலி நிலையத்தை அடைந்தேன். அங்கு என்னை எதிர்கொண்ட மேஜர் ரஷித், என்னை கொண்டாக்கர் முஸ்தாக், தகிருடீன் தாகூர், மேஜர் தலீம், மேஜர் ஜெனரல் காலிலூர் ரகுமான் ஆகியோர் இருந்த அறைக்கு அழைத்துச் சென்றார். நான் சிலமணி நேரம் கொண்டாக்கர் முஸ்தாக்குடன் பேசினேன். நாட்டின் சுதந்திரத்தைக் காப்பாற்ற வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினேன். மேஜர் ரஷித் என்னை வேறு அறைக்கு அழைத்துச் சென்று மந்திரி சபையில் சேருமாறு வலியுறுத்தினார். சகல ஆயுதப்படைத் தளபதிகளையும் அழைத்து, பிரச்சனைகளை விவாதித்து ஒரு தீர்வைக் காணுமாறு நான் அவரிடம் கூறினேன். நானும் லெப்டினன்ட் கேணல் சியாவுடீனும்தான் நிலைமையைக் காப்பாற்ற முடியுமென்றும், தனக்கு அரசியல்வாதிகளிலும், இராணுவத் தளபதிகளிலும் நம்பிக்கை இல்லை என்றும் கூறினார். நான் அவரது வேண்டுகோளை நிராகரித்தேன். பாக்சல் [ முஜிப்பின் கட்சி ] தலைவர்களைத் தவிர,





# வங்கம் தந்த பாடம்

தேசியப் பற்றுள்ள ஏனைய கட்சிகளை உள்ளடக்கிய அரசை அமைக்குமாறு நான் கூறினேன்.

பின்வருவனவற்றை அமல்படுத்துமாறு கொண்டாக்கர் முஸ்தாக்கியிடம் நான் கூறினேன்.

- **மோசடியும் ஊழலும் மிக்க அரசியலமைப்பு நீக்கப்பட வேண்டும்.**
- **நாடு பூராவும் இராணுவச் சட்டம் அமல்படுத்தப்பட வேண்டும்.**
- **சகல அரசியற் கட்சிகளும் விடுதலை செய்யப்பட வேண்டும்.**
- **பாக்சால் தவிர்ந்த அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய சர்வகட்சி தேசிய அரசு அமைக்கப்பட வேண்டும்.**
- **பாராளுமன்றுக்கும் அரசியல் அமைப்பு சபைக்குமான பொதுத்தேர்தல் உடனடியாக நடத்தப்பட வேண்டும்.**

கொண்டாக்கர் முஸ்தாக் எனது கருத்துக்களைக் கவனமாகக் கேட்டார். உடனடியாக நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார். பங்கா பவானில் நடைபெறும் கொண்டாக்கர் முஸ்தாக்கின் பதவியேற்பு வைபவத்தில் நானும் கலந்துகொள்ள வேண்டும் என்று மேஜர் ரஷித் என்னிடம் கேட்டுக்கொண்டார். 11:20 மணியளவில், நான் மனக்குழப்பத்துடன் வானொலி நிலையத்திலிருந்து வெளியேறினேன். கொண்டாக்கர் முஸ்தாக் தனது சொல்லைக் காப்பாற்ற மாட்டார் என்பதை உணர்ந்து கொண்டேன். மேலும், இந்த சதிகாரர்களின் பின்னால் வேறு யாரோ இருந்து இயக்குவது போலவும் உணர்ந்தேன்.

வெகுவிரைவில், இது எனக்கு மிகத் தெளிவாக விளங்கியது. நாட்டு மக்களுக்கு நிகழ்த்திய உரையில் கொண்டாக்கர் முஸ்தாக் நான் சொன்ன எதைப்பற்றியும் மூச்சு விடவில்லை. நான் மத்தியானமளவில் பங்கா பவானை அடைந்தேன். நான் போனபோது பதவியேற்பு வைபவம் முற்றுப்பெற்று விட்டது. பின்னேரப் பொழுதில், கொலையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நான் சந்தித்தேன். அவர்களுக்கு மேஜர் ரஷித் தலைமை தாங்கினார். நான் முஸ்தாக்கிடம் சொன்ன கருத்துக்களை மீண்டும் இவர்களிடம் சொன்னேன். முதல் நடவடிக்கையாக சகல அரசியற் கைதிகளும் விடுவிக்கப்பட வேண்டும் எனக் கூறினேன்.

எமது கலந்துரையாடலின் இறுதிப் பகுதியில் நான் ஜெனரல் சியாவை அழைத்தேன். அவர்கள் யாவரும் எனது கருத்துக்களை அங்கீகரித்தனர். இதுவே இப்போது சரியான வழியெனக் கூறினர். அடுத்தநாள் நான் மேஜர் ஜெனரல் சவியுல்லாவையும் மேஜர் ஜெனரல் எம். காலிலூர் ரகுமானையும் சந்தித்தபொழுது அவர்களும் நான் கூறியதை ஏற்றுக் கொண்டனர்.

இதற்கிடையில், 16ம் திகதியன்று, சிலர் எனது பெயரை தவறாகப் பயன்படுத்துவதாக அறிந்தேன். மேஜர் ரஷித்தும், மேஜர் பாருக்கும் (Farook) இணைந்து, நானும் அவர்களுடன் இணைந்திருப்பதான பொய்யான தகவலை போர்வீரர்களிடையே பரப்பியிருந்தனர். 17ம் திகதியன்று இந்த நாடகத்தின் முழு விபரமும் எனக்கு தெளிவானது. ஐக்கிய அமெரிக்காவும், பாக்கிஸ்தானும் பின்னணியில் இருந்து இயக்குவதை நான் உணர்ந்தேன். மேலும், அவாமிலீக்கின் மேற்பகுதியுடன் இணைந்து, கொண்டாக்கர் முஸ்தாக்கும் முஜீப்பின் கொலையில் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருப்பதை நான் அறிந்து கொண்டேன். இந்தக் குழு முன்பே திட்டமிட்ட ஒரு பாதையில் இயங்கியது. 17ம் திகதி முதல், நான் பங்கா பவானுக்குச் செல்வதை நிறுத்தி, அந்தக் குழுவுடனான சகல தொடர்புகளையும் துண்டித்தேன்.

ஜெனரல் ஒஸ்மானி, முஸ்தாக்கின் இராணுவ ஆலோசகராக நியமிக்கப்பட்ட கையுடன் என்னைத் தொடர்பு கொண்டார். பங்களாதேஷின் பல பகுதிகளுக்கு அவர் என்னை அழைத்துச் சென்றார். லெப்டினன்ட் கேர்ணல் சியாவுடன் பற்றி அவர் என்னிடம் பல தடவைகள் விசாரித்துத் தெரிந்துகொண்டார். அவரைத் தானும் சந்திக்க வேண்டுமென அவர் என்னிடம் கூறினார். ஆனால், அதற்கு முன், சியாவுடனின் ஆயுளுக்கு எதிராக விடுக்கப்பட்ட (Warrant) கட்டளையை அரசு வாபஸ் பெறவேண்டும் என்றும் அவருக்கெதிரான குற்றச்சாட்டுகள் நிறுத்தப்பட வேண்டும் எனவும் நான் கூறினேன்.

புரட்டாதி மாதத்தின் இறுதியில், மேஜர் ரஷித் ஜனாதிபதி முஸ்தாக்கிடமிருந்து

> **முஜீப் அரசை விடச் சிறந்தது அல்ல. நாட்டில் ஏற்பட்ட ஒரேயொரு மாற்றம், இந்திய– சோவியத் மேலாதிக்கத்திற்குப் பதிலாக அமெரிக்க மேலாதிக்கம் வந்ததேயாகும். மற்றபடி நாட்டில் எந்தவித மாற்றமும் இல்லை. அரசின் அடக்குமுறை கூடியது. மக்களைக் கஸ்டப்படுத்துதல் தொடர்ந்தது. அரசியற் தொழிலாளர்களைக் கைது செய்வது சாதாரணமாகி விட்டது. உண்மையில் நாடு சிவிலியன் சர்வாதிகாரத்திலிருந்து இராணுவ அரச இயந்திர சர்வாதிகாரமாக மாறியது.**

தகவல் கொண்டுவந்தார். நானும் சியாவுடனும் இணைந்து அரசியற் கட்சியை ஆரம்பிக்க வேண்டும் என்றும், அதற்கான சகல வசதிகளையும் தாங்கள் செய்வதாகவும் கூறினார். நான் இதனை நிராகரித்து, முதலில் சகல அரசியற் கைதிகளும் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தினேன். முஸ்தாக்குக்கு சரியான அரசியற் தளம் இல்லை என்பது தெளிவாகியிருந்தது. ஒரு சிறு குழுவைத் தவிர, அவருக்கு இராணுவத்திலும் வேறு ஆதரவு இல்லை. மக்கள் மத்தியிலும்கூட அவருக்கு ஆதரவு இல்லை. இப்பொழுது முஸ்தாக்கின் அரசைப் பார்ப்போம்.

இந்த அரசு முஜீப் அரசை விடச் சிறந்தது அல்ல. நாட்டில் ஏற்பட்ட ஒரேயொரு மாற்றம், இந்திய– சோவியத் மேலாதிக்கத்திற்குப் பதிலாக அமெரிக்க மேலாதிக்கம் வந்ததே யாகும். மற்றபடி நாட்டில் எந்தவித மாற்றமும் இல்லை. அரசின் அடக்குமுறை கூடியது. மக்களைக் கஸ்டப்படுத்துதல் தொடர்ந்தது. அரசியற் தொழிலாளர்களைக் கைது செய்வது சாதாரணமாகி விட்டது. உண்மையில் நாடு சிவிலியன் சர்வாதிகாரத்திலிருந்து இராணுவ அரச இயந்திர சர்வாதிகாரமாக மாறியது.

மக்கள் அமைதியற்று இருந்தார்கள். இப்படிப்பட்ட நிலையை அவர்கள் அங்கீகரிக்கத் தயாராக இல்லை. இந்திய– சோவியத் ஆதரவாளர்களும், மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாத சமுக சக்திகளும் சூழ்நிலையைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தப் பார்த்துக்கொண்டிருந்தன. முஸ்தாக் அரசின் தோல்விகளைப் பயன்படுத்தி எமது தேசிய நலனை அழிக்கச் சதி செய்தனர். பேராசை கொண்ட பிரிகேடியர் காலித், முஸ்ரப் சதிக்குத் தலைமை தாங்கினார். 1975 கார்த்திகை 3 அன்று எதிர்ப்புரட்சி சதி மூலம் ஆட்சியைக் கைப்பற்றினார்.

அன்றைய தினம் சுகவீனம் காரணமாக நான் நாராயன் கன்கலில் இருந்த எனது வீட்டில் கட்டிலில் படுத்திருந்தேன். எனினும், அதிகாலை 4 மணிக்கு எனக்கு தொலைபேசி மூலம் செய்தி கிடைத்தது. மேஜர் ஜெனரல் சியாவூர் ரகுமான் எனது உதவியைக் கேட்டு வேண்டினார். நாம் பேசி முடிக்கும் முன்பு தொலைபேசித் தொடர்பு துண்டிக்கப்பட்டது. அன்றைய தினம் பெருமளவு போர்வீரர்களும், இளம் அதிகாரிகளும் எனது வீட்டிற்கு வந்தனர். நான் எல்லோருடனும் பேச முடியாமல் இருந்தமையால், எனது அறையின் உள்ளிருந்து சிலருடன் பேசினேன். அவர்கள் காலித் முஸ்ரபாவின் சதி இந்தியர்களின் ஆதரவுடன் நடைபெற்றது என்றும், பாக்சால் [ஷேக் முஜிபின் கட்சி] சக்திகள் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்ற முயலுகின்றன என்றும் கூறினார்கள். 'வங்காளி' படைப்பிரிவிற்கும் ஏனைய படைப்பிரிவுகளிற்கும் இடையில் பதட்ட நிலை அதிகரிப்பதாயும், எந்த நேரத்திலும் துப்பாக்கிப் பிரயோகம் ஏற்படலாம் எனவும் கூறினர்.

அவர்களை அமைதியாக இருக்குமாறும், ஏனைய போர்வீரர்களுடன் தொடர்புகொண்டு சூழ்நிலை பற்றிய கருத்துக்களைப் பரிமாறும் படியும் நான் கூறினேன். எமது நாட்டின்



சுதந்திரத்தை அழிக்க முயலும் எந்த சக்தியாக இருந்தாலும் அவர்களிடம் கவனமாக இருக்கும்படியும் கூறினேன். ஒவ்வொரு போர்வீரனதும் கடமை நாட்டின் எல்லைகளைக் காப்பதும், சுதந்திரத்தைக் காப்பதும் எனத் தெளிவுபடுத்தினேன். எமது சமுதாயம் போன்ற ஒரு சமுதாயத்தின் அரசுஅதிகாரத்தில் தலையிட ஆயுதப்படைகளுக்கு எந்த அவசியமுமில்லை. சதிகளுக்கும் எதிர்ச் சதிகளுக்கும் பின்னால், பேராசை கொண்ட அதிகாரிகளுக்கிடையில் போட்டியுண்டு. இவர்களுக்கு தமது சுயநலனைத் தவிர வேறெந்த சிந்தனையும் இல்லை. தமது சுயநலனைப் பூர்த்தி செய்வதற்கு சாதாரண போர்வீரர்களை அவர்கள் பகடைக் காய்களாகப் பயன்படுத்துகின்றனர்.

நாட்டை எப்படி நடத்துவது என்பதை மக்கள் தான் தீர்மானிக்க வேண்டும். போர் வீரர்களை தமது முகாம்களுக்குத் திரும்பிச் செல்லுமாறும், எக்காரணம் கொண்டும் ஒருவரையொருவர் தாக்க வேண்டாமென்றும், சரியான நேரத்தில் மக்களுடன் இணைந்து போராட வேண்டுமென்றும் நான் கூறினேன். இதுவே அதிகார வெறிகொண்ட இராணுவ அதிகாரிகளை முறியடிக்க ஒரேயொரு வழியாகும்.

கார்த்திகை 3ம் திகதிக்குப் பின்னர் எமது நாடு பட்ட கஷ்டங்கள் எல்லோருக்கும் தெரியும்.



காலித்தை இந்தியா ஆதரிக்கின்றது என்பதும் எல்லோருக்கும் தெரியும். நாட்டின் சுதந்திரம் அந்தரத்தில் தொங்கிக்கொண்டு இருக்கும் போது, அட்மிரல் எம். எச். கானும், விமான மார்ஷல் எம். ஜி. தலாப்பும் காலித் முஸ்ரபாவின் மேல் மேஜர் ஜெனரல் பதக்கத்தைப் பொறித்தது கேவலமான விடயமாகும். இப்படிப்பட்ட சின்னப்புத்தியுடைய மனிதர்களைப் பார்த்து நான் விசனப்படுகிறேன். இந்தக் கோழைகள் காலில் விழுந்துதான் தமது சுயமரியாதையைக் காப்பாற்ற வேண்டியிருந்தது. சியாவுர் ரகுமான் எங்கே? அவர் காலித்தின் சிறையில் பயந்து நடுங்கிக் கொண்டிருந்தார். தலாப்பும் கானும் எங்கே? அவர்கள் தமது புதிய எஜமானனின் கால்களை நக்கிக் கொண்டிருந்தனர். ஆயுதப்படைகளில் இப்படிப்பட்ட கோழைகளை வைத்திருக்க வேண்டிய தேவை இந்த நாட்டுக்கு இல்லை.

கார்த்திகை 4ம் திகதி மாலை மேஜர் ஜெனரல் சியாவுர் ரகுமானிடமிருந்து ஒரு செய்தி அவருடைய உறவினர்கள் மூலம் எனக்குக் கிடைத்தது. போர்வீரர்களிடையே எனக்கிருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி தன்னையும் நாட்டின் சுதந்திரத்தையும் காப்பாற்றுமாறு அவர் வேண்டினார். துணிவுடனும் அமைதியாகவும் இருக்குமாறு நான் அவருக்குக் கூறியனுப்பினேன். அதே நேரத்தில், சதிகார காலித் முஸ்ராப் குழுவினரை வீழ்த்துவதற்கான ஆயத்தங்களைச் செய்யுமாறு போர்வீரர்களும் அதிகாரிகளும் என்னிடம் கூறினார்கள்.

எமக்கிடையே சரியான கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. அதன்பின், சில படிகளை மேற்கொள்ளத் திட்டமிட்டோம் நாம். கார்த்திகை 6ம் திகதியன்று, டாக்கா இராணுவ முகாமிலிருந்த சகல படைப்பிரிவுகளின் பிரதிநிதிகளையும் ஆயத்தமாக இருக்கும்படியும், கட்டளைகளை எதிர்பார்க்கும்படியும் நான் அறிவித்தேன். அன்று மாலை எல்லோரும் ஆயத்தமாக இருந்தார்கள். புரட்சியானது 7ம் திகதி அதிகாலை 1 மணிக்கு நடாத்தப்பட வேண்டியிருந்தது.

**எமது தீர்மானங்களாக:**

**★காலித் முஸ்ராப் குழுவை பதவியிலிருந்து நீக்குதல்.**
**★சியாவுர் ரகுமானை விடுதலை செய்தல்.**
**★புரட்சிகர இராணுவ சபையை நிறுவுதல்.**
**★சகல அரசியற் கைதிகளையும் விடுதலை செய்தல்.**
**★பாக்சால் தவிர்ந்த சனநாயக தேசிய அரசை அமைத்தல்.**
**★சகல அரசியற் தொழிலாளர்களுக்கும் எதிராக இடப்பட்ட வாரண்ட் கட்டளைகளை மீளப்பெறுதல்.**
**★ புரட்சிகரப் போர்வீரர்கள் இயக்கத்தின் 12 வேண்டுகோள்களையும் அங்கீகரித்து அமுல்படுத்தல்.**

**போன்றவற்றை வைத்திருந்தோம்.**

**தொடரும்...**



# வலை

அங்கம்: 02

**கொற்றவை**

மம்மல் பொழுது. நிலவுகூட எழும்பி விட்டது. வருவது ஒரு பெண் என்பது தெளிவாகத் தெரிந்தது. இந்த நேரத்தில், அதுவும் மின்வெட்டு என்று முன்பே அறிவித்திருந்த நேரத்தில் இங்கு வருவது யாராக இருக்கும்? சாந்தி ஆவலுடன் எட்டியெட்டிப் பார்த்தாள்.

‘‘எட....! வதனியக்கா..!! வாங்கோ! வாங்கோ! இண்டைக்குத்தான் உங்களுக்கு வழி தெரிஞ்சுது போல....’’

சாந்தியின் குரலில் குதூகலம் கொப்பளித்தது.

வதனியை சாந்திக்கு புனர்வாழ்வு முகாமில்தான் பழக்கம். அவ ஒரு சமுக சீர்திருத்தவாதி. தப்பென்று படுவதை துணிச்சலாக தட்டிக் கேட்கக் கூடியவா. இதனால் வதனியையும் பிடித்துக் கொண்டுபோய் அடைத்து வைத்திருக்கிறாங்கள். முகாமில் கைக்குழந்தையும் இயலாமையுமாக சாந்தி கஸ்ரப்பட்டதைப் பார்த்த எல்லாருக்கும் மனக் கஸ்டம்தான். ஆனால், தங்களுக்கு இனியும் பிரச்சனை வந்திடக்கூடாது என்று எல்லோரும் ஒதுங்கி இருந்திட்டினம். அந்த நேரத்தில் வதனி மட்டுந்தான் தனக்கு உறுதுணையாக நின்றவ என்றும், அவ இல்லாட்டா தன்னையும் பிள்ளையையும் புதைச்ச இடத்தில புல்லு முளைச்சிருக்கும் என்றும் பல தடவைகள் சாந்தி சொல்லியிருக்கிறாள். அதைக் கேட்டு வதனிமேல் எப்போதும் ஒரு நன்றியுணர்வு ஆனந்தனுக்கு இருக்கு.

புனர்வாழ்வு முடிந்து வெளியில் வந்ததும் நாட்டின் நிலைமையே தலைகீழாக மாறிக் கிடந்தது. சமுக செயற்பாட்டாளர்களுக்கு எந்தவித பாதுகாப்பும் இல்லை. ஒரு பின்புலம் இல்லாமல் இயங்குவது கடினம் என்று ஒரு குறிப்பிட்ட கட்சியின் மகளிர் அமைப்பில் இணைந்து வேலை செய்கிறா வதனி. அவர் இணைந்திருக்கும் கட்சியின் கோட்பாடில் ஆனந்தனுக்கு பெரிதாக உடன்பாடில்லை என்றாலும் வதனியின் சமுக செயற்பாடுகள் அவனைக் கொஞ்சம் கவர்ந்துதான் இருக்கின்றன என்று சொல்ல வேண்டும். ஆனந்தன் வதனியை ஒரு போதும் சந்தித்ததில்லை. விழாக்கள் நடைபெறும் இடங்களில் தூர இருந்து கண்டிருக்கிறான்.

‘‘வாங்கோ’’!!

சேட்டின் பொத்தானைப் பூட்டியபடி வெளியின் வந்த ஆனந்தனும் வரவேற்றான். அரிக்கன் லாந்தரின் திரியைத் தூண்டி நடுவில் கொண்டுவந்து வைத்தாள் சாந்தி. எல்லோரும் வெளி விறாந்தையில் அமர்ந்து கொண்டனர்.

‘‘நான் உங்களைத்தான் பார்க்க வந்தனான் அண்ணை! ஒரு விசயம் என்னை உறுத்திக்கொண்டே இருக்குது யாரிட்டை ஆலோசனை கேட்கிறது எண்டு தெரியாமல் அந்தரப்பட்டனான். பிறகுதான், உங்களட்டைக் கேட்கிறதுதான் சரியாக இருக்கும் எண்டு பட்டுது. குறை நினைக்காதேங்கோ!’’

விசயத்தைப் பட்டென்று உடைத்தார் வதனி.

அவவிற்கும் ஆனந்தனுக்கும் சம வயதுதான் இருக்கும். சிலவேளை அவனுக்குக் குறைவாகவும் இருக்கலாம். ஆனாலும், மரியாதையின் நிமித்தம் வயது வேறுபாடு பற்றி கருத்தில் எடுக்காமல் ‘‘அண்ணை’’ என்றும் ‘‘அக்கா’’ என்றும் கூப்பிடுவது எங்கள் இடங்களில் வழமைதானே!

‘‘ சொல்லுங்கோ.!! ஏதும் பெரிய பிரச்சனையே?’’

‘‘பார்த்தால் பெரிதா ஒண்டுமில்லாத மாதிரி இருக்கும் ஆனா, ஏதோ பெரிசா சம்பந்தப்பட்டிருக்கிற மாதிரித்தான் எனக்குப் படுகுது. நான் சொன்னதுக்குப் பிறகு, நீங்கள் என்ன நினைக்கிறீங்கள் எண்டு சொல்லுங்கோ.’’

‘‘சின்னச் சின்ன விசயங்கள்தான். கோப்பாயில, நாங்கள் நடத்துற சிறுவர் பாடசாலையில பிள்ளையை விடுற ஒரு இளம் தாய். கொஞ்ச



# வலை

நாளா ஏதோ மனவுழைச்சலில இருந்த மாதிரி இருந்திது. நானும் கன தரம் கேட்டிட்டன். ஒண்டுமில்லை எண்டிட்டா. இப்ப கொஞ்ச நாளா முகத்தில, கையில எண்டு சின்னச்சின்னக் காயங்கள். தாண்டித் தாண்டி நடந்தா. அன்றைக்குப் பொறுக்க ஏலாமல் கொஞ்சம் அதட்டிக் கேட்டனான். உடைஞ்சு போய் அழத்தொடங்கீட்டுது பெட்டை. அவ வின்ரை மனுசனுக்கு கொஞ்சநாளா காரணமே இல்லாமல் அவவில சந்தேகமாம். போட்டு அடியடியென்று அடிக்கிறானாம்.’’

‘‘ மனிசிமார் கொஞ்சம் வடிவாயிருந்தால் சில புருசன்மார் இப்பி டித்தானே அக்கா இருக்கினம்? அடிக்கிறது பிழை எண்டு புரிய வைச் சால் சரிவராதோ..?’’ தேநீரைக் கையில் கொடுத்தபடி சாந்தி கேட்டா.

‘‘அவன் ஏதோ பித்துப்படிச்ச மாதிரி நடக்கிறானாம். தனியா இருட்டில இருந்து சிரிக்கிறானாம். ஏதேனும் பெரிய வருத்தமோ எண்ட பயத்தில பெட்டை இவன்ரை சேட் பொக்கற் எல்லாம் தேடியி ருக்குது. ஒரு சின்ன வெள்ளைக் குளிசைதான் கிடைச்சுதாம். அதுவும் கீழை விழுந்திட்டுது என்று குப்பையில தூக்கிப் போட்டிட்டாளாம்..’’

‘‘ஏதும் வருத்தம் கிருத்தமா இருக்குமோ..?’’ மீண்டும் சாந்திதான் கேட்டாள்.

‘‘தெரியேல்லையே..! அண்டைக்கு அந்தக் குளிசையைக் காணேல்லை எண்டு அவன் கை கால் நடுங்க உரு ஆடீட்டானாம். தெரிஞ்ச ஒருத்தனிட்டை காசு குடுத்து குளிசை வாங்கினதை இவள் பிறகு கண்டிட்டாள். என்ன குளிசை, அவனுக்கு என்ன பிரச்சனை எண்டு அறிஞ்சு சொல்லுங்கோ எண்டு ஒரே அழுகை. நானும் தெரிஞ்ச ஓராளட்டைச் சொல்லி விசாரிச்சனான்...’’

‘‘அப்ப... கெதியில தெரிஞ்சுடும் பிரச்சனையும் முடிஞ்சுடும்’’

‘‘இல்லை சாந்தி... இப்பதான் பிரச்சனையே ஆரம்பிக்குது.... நான் விசாரிக்கச் சொன்னது ஆருக்கோ பிரச்சனையா இருக்குது.. எங்கட பக்கத்து வீட்டில, எங்களைப்போல அவையும் கேற்றுக்கு தகரம் அடிச்சு மறைச்சிருக்கினம். விசாரிக்கச் சொன்ன அண்டு இரவு, மூண்டு மோட்டச்சைக்கிள்ள ஆறு பேர் வாளோட வந்திருக்கிறாங்கள். வீட் டில ரெண்டு வயசானவை மட்டும்தான். தேவையில்லாத விசயத்தில தலையிட்டால் துண்டுதுண்டா நறுக்கிப்போடுவம் என்று வெருட்டி, வீட்டுச் சாமானுகள் எல்லாத்தையும் போட்டு உடைச்சிருக்கிறாங்கள். அதுகள் கதிகலங்கிப் போச்சுதுகள். என்ன சொன்னவங்கள் எண்டு அவைக்கு விளங்கேல்ல... நீங்கள் கேற்றைப் பாத்திருக்க வேணும்... பாளம் பாளமா வாளால கிழிச்சு எடுத்திருக்கிறாங்கள்....’’

‘‘அவையள் உங்களைத் தேடி வந்திருக்கினம்... மாறி பக்கத்து வீட்ட போட்டினம் என்ன?’’ ஆனந்தன் முதற் தடவையாக வாய் திறந்தான்.

‘‘ஓமண்ணை..! எனக்கும் அப்பிடித்தான் பட்டுது... பிள்ளையளை உடனையே திண்ணைவேலில அண்ணை வீட்டுக்கு அனுப்பீட்டன். இந்த விசயத்தில ஏதோ வில்லங்கம் இருக்கிறமாதிரி படுகுது..’’

‘‘உரும்பராயில ஒரு வாழைத் தோட்டத்துக்குள்ள இளம் குடும்பகா ரன் ஒருத்தன் செத்துக் கிடந்தது பேப்பரில வந்தது பாத்தனீங்களோ அக்கா..? அதில வந்த இன்னுமொரு விசயம் பக்கத்தில ஒரு ஊசி போடுற சிரிஞ்ச். அதோட சின்னச்சின்ன அலுமினியக் கடதாசித்தா ளுகள், ஒரு லைற்றர் எண்டு என்னென்னவோ இருந்தது எண்டும் வந்ததல்லோ...? அப்ப அங்க வேறை ஆட்களும் இருந்திருக்கினம் போதைவஸ்துகள் புழங்குது எண்டு எனக்கு ஒரு சந்தேகம்....’’

‘‘அக்கா..! நீங்கள் கொஞ்சம் கவனமா இருக்க வேணும்.. இதை செய்யிறவங்கள் பெரிய பெரிய இடத்தில இருக்கிறாங்கள். எல்லா ரையும் வாங்கி வைச்சிருக்கிறாங்கள்.. எல்லா இடத்திலயும் அடியாள் வைச்சு விக்கிறாங்கள்..இது ஒரு பெரிய நெட்வேக். இந்த மாஃபியாக் கள் என்னவும் செய்வாங்கள். இந்த விசயத்தை நீங்கள் இப்பிடியே கைவிடுங்கோ... நான் உள்ளுக்கிளாலை விசாரிச்சுப் பாக்கிறன்...’’

அன்றிரவு தூங்கவே முடியவில்லை... என்னென்னவோ நினைவு கள் மனதில் அலைமோதின.... நன்றாகப் படிக்கக் கூடியவன் ஆனந் தன். சமுகத்தில் ஒரு சரியான மாற்றம் வரவேண்டும் என்பதற்காக எல்லாவற்றையும் உதறிவிட்டுப் புறப்பட்டவன். போய்ச் சேர்ந்த இடம் வாழ்நாளில் மறக்க முடியாத அனுபவங்களையும் ஆளுமையையும் கற்றுத் தந்தது ஆனந்தனுக்கு. இப்படியான ஒரு ஆசானின் கீழ் கட்டாயமாக விடியல் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை எல்லோ ருக்குமே இருந்தது.

அந்நியர் யாரும் உட்புகாமல் காத்தார்கள் அவர்கள். குற்றங்கள் இல்லையெனும் அளவிற்குக் குறைந்திருந்தன. ஒரு கட்டுக்கோப்பும் பிடிப்பும் இருந்தது எல்லோரிடத்திலும். இன்று,. போதைவஸ்து.. பாலி யல் வன்கொடுமைகள் என்று எத்தனை சீரழிவுகள்..?

புரண்டு புரண்டு படுத்தான் ஆனந்தன்.

‘‘அப்ப.. இப்பிடியெல்லாம் இங்க நடக்குதோ..? நினைக்கவே பயமாக் கிடக்கப்பா....’’

சாந்தியும் நித்திரை கொள்ளவில்லை என்பது அவள் பேசிய பின் தான் தெரிந்தது.

இன்றைக்கு ஏதும் வேலை கிடைக்குமோ கிடைக்கதோ என்று ஒரு தவிப்பு. அதற்கு விடை கிடைத்தாற்போல் மண்டியில் ஒரு வேலை செய்வதற்கு அழைப்புக் கிடைத்தது. பிரபல பாடசாலை ஒன்றிற்கு வெளியில் இருக்கும் பெட்டிக்கடைக்கான பொருட்களை சைக்கிளில் விநியோகம் பண்ண வேண்டும்.

கலைந்த தலையும் சாயம்போன சாரமுமாக வந்து நின்ற ஆனந் தனை ஏறிறங்கப் பார்த்தார் மண்டிக்காரர்.

‘‘பார்க்க ஒரு மாதிரி இருக்கிறார்.. நம்பலாமோ..?’’ என்ற சந்தேகம் அவர் கண்களில் தெரிந்தது. அவரிலும் தப்பில்லை. இவ்வளவு வருட சிறைவாழ்வு ஆனந்தனை உருக்குலைய வைத்து உருமாற்றியிருந்





# வலை

தது. யார் என்று அடையாளம் தெரியாமல் இருப்பதும் நல்லதுதான் இல்லையென்றால் இதைச்சாட்டியே வேலை தரமாட்டார்கள்.

‘‘நான் சொன்ன நம்பிக்கையான ஆள் இவர்தான் அண்ணை..! பேர் ஆனந்தன்.நம்பி என்ன பொறுப்பையும் குடுக்கலாம். காசுக் கணக்கில கூட நீங்கள் பயப்படவே தேவையில்லை...’’

வேலைக்கெனக் கூட்டி வந்தவர் சிபாரிசு செய்தார்.

‘‘தம்பி..!! இந்த பிசினஸில அந்தக் கட்சிக்காரரும் பங்குதாரர். ஆளுங்கட்சியோடயே ஒட்டிக்கொண்டு இருக்கிறவை. கவனமா நடந்து கொள்ளும்...’’ கூட்டி வந்தவர் இரகசியமாகக் காதைக் கடித்தார்.

பெட்டிக்கடைக்குரிய சின்னச் சின்னப் பொருட்கள்தான், பாடசாலை வாசலில் இருப்பதால் உடனேயே தீர்ந்துவிடும், ஒரு நாளைக்கு இரண்டு மூன்று தரம் விநியோகிக்க வேண்டும் என்று சொன்னார்கள். அப்படியென்றால் ஒரு வாகனத்தில் ஒரே தடவையில் விநியோகிக்கலாமே என்ற எண்ணம் தோன்றியது. பெட்டி கொஞ்சம் பெரியதாகவும் பாரமானதாகவும் இருந்தது. சைக்கிளில் பெட்டியைக் கட்டி புறப்படத் தயாரானான் ஆனந்தன்.

‘‘அந்தக் கடையில இருந்து கொஞ்சக் காசு வரக்கிடக்கு. நிண்டு, முதலாளி வந்தவுடனை வாங்கிக்கொண்டு வாரும் தம்பி. நான் போனில நீர் வாறீர் எண்டு சொல்லி விடுறன்...’’ மண்டிக்காரர் சொன்னார்.

தன்னுடைய நாணயத்தைச் சோதிப்பதற்காகத்தான் இது என்று ஆனந்தனுக்கு நன்கு புரிந்தது.

கடையில் நல்ல வியாபாரம் போல. மாணவர் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது கடை. பார்த்தால் பெரிய ஆடம்பரமான கடை போலவும் இல்லை. சொக்கிளேற்றுகளும், பிஸ்கட்டுகளும், கடலை மிட்டாய் போத்தல்களும் முன்வரிசையில் நிரப்பி வைக்கப்பட்டிருந்தன. கடையின் முதலாளி இன்னும் வரவில்லை. வேலை செய்ய நின்றவன் பெட்டியை பின்பக்கமாகத் தூக்கிச் சென்றுவிட்டான்.

மணிச் சத்தம் கேட்டதும் மாணவர்கள் கலைந்து பாடசாலையினுள் சென்றார்கள். சிலர் பாடசாலை சீருடையிலே வெளியே மறைவாகப் போனதையும் பார்க்க முடிந்தது. வீதி உயிர்ப்புடன் இருந்தது.

முதலாளி வரும்வரை காத்திருக்க வேண்டியதுதான். கொஞ்சம் தள்ளி நின்று வீதியை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான் ஆனந்தன். அப்போதுதான் அவனின் கண்களில் பட்டது அச்சம்பவம்...

[redacted]



# காலபோகக் கனவு

காலபோகக் கனவுகளின்
வெகுமதியை - மழை
பறித்துச் சென்று
நீண்ட நேரமாகியிருந்தது.
கனவுகளை தின்ற
ஏமாப்பில்-
கோழி விழுங்கிய
கருநாகம் போல்
அசைவற்று கிடந்தது
வானம்.!

ஊர்ப் பெண்டுகளின்
மாராப்பை போல்
விசிறியடித்தது
காற்று!

தலைப்பிரசவத்திற்காய்
காத்திருந்த
நாளொன்றில்..
தாய்மடி தொடாது
இறந்து போன
குழந்தையின் தாய்போல
அலங்கோலமாய்
கிடந்தது
வயல்!
ஆறுதல் தரமுடியா
துணைவனாய்
தேம்பியே அழுதது.....
நிலம்!!

வீட்டின் கூரையில்
எங்கோ ஓர் மூலையில்
தொங்கும் ஒட்டறைபோல்
காத்து கிடக்கின்றன
ஏழை விவசாயின்
காலபோகக்
கனவுகள்!!

மிதயா கானவி

ஐங்கரன் விக்கினேஸ்வரா



# சிலி நாட்டைச் சிலிர்க்க வைத்த மா கவி பாப்லோ நெருடா

பாப்லோ நெருடாவின் கவிதைகள் இருபதாம் நூற்றாண்டில் உலக மொழிகள் எல்லாவற்றிலும் வெளிவந்த சிறப்பினால், மாபெரும் கவிஞர் என லத்தீன் அமெரிக்க எழுத்தாளராகிய கேப்ரியல் கார்சியா மார்க்வெஸ், நெருடாவினைப் புகழ்கின்றார்.

இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த கவிஞர்களில் ஒருவர். இவர் கவிஞராக மட்டுமல்லாது, சமூக உணர்வு கொண்ட போராளியாகவும், மார்க்சிய தத்துவங்களில் ஈடுபாடு கொண்டவராகவும் திகழ்ந்தவர். பாப்லோ நெருடா, (Pablo Neruda, ஜூலை 12, 1904 – செப்டம்பர் 23, 1973) என்ற புனைபெயர் கொண்ட ரிக்கார்டோ இலீசர் நெப்டாலி ரீயஸ் பொசால்தோ (Ricardo Eliecer Neftal Reyes Basualto), சிலி நாட்டில் பிறந்தவர்.

பாப்லோ நெருடாவின் முதல் கவிதைத் தொகுப்பு, 19ஆம் வயதில் வைகறைக் கதிர்கள் (Books of Twilights) என்ற பெயரில் 1923 ஆம் ஆண்டு வெளிவந்தது. நெருடாவின் ‘‘இருபது காதல் கவிதைகளும் ஒரு விரக்தி பாடலும்’’ என்ற கவிதை தொகுப்பு ஸ்பானிய மொழியில் பெரும் கிளர்ச்சியையும், பரபரப்பையும் ஊட்டியது.

இத்தொகுப்பு வெளியிடும் போது நெருடாவின் வயது இருபது. காதல் கவிதைகளில் அதிர்ச்சியும் நேரடித்தன்மையும் கொண்ட அத்தொகுப்பு ஸ்பானிய மொழி பேசும் நாடுகளில் நெருடாவினை மேலும் பிரபலமாக்கியது.

## பாப்லோ நெருடா எனும் புனைப்பெயர்

1920 ஆம் ஆண்டு கவிதை எழுதுவதற்காக, செக்கோஸ்லாவாகியா எழுத்தாளரான ஜோன் நெருடாவின் பெயரால் உந்தப்பட்டு, தன் பெயரையும் பாப்லோ நெருடா என்ற புனைப்பெயரினை ஏற்றுக்கொண்டார்.

பாப்லோ என்பது ஸ்பானிஷ் மொழியில் பால் (Paul) என்பதன் வடிவமாகும் 1904 ஆண்டு, ஜூலை 12 தேதி சிலி நாட்டில் உள்ள பாரல் என்ற ஊரில் பாப்லோ நெருடா பிறந்தார். இவர் பிறந்த சில நாட்களிலேயே இவரை ஈன்ற தாய் மறைந்தார். பாப்லோ நெருடா முதல் முயற்சியாக தனது எட்டாம் அகவையில் எழுதிய கவிதை, தன் பெருந்தாயைப் பற்றியதே. கவிதை எழுதுவதில் நாட்டமும் திறனும் கொண்டவர். சிறு வயதிலேயே இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டவர். 10 வயது முதலே பலரால் அறியப்படும் கவிஞராகப் புகழ்பெற்றார்.

ஆயினும் பாப்லோ நெருடாவின் தந்தை இவரது எழுத்தையும் இலக்கிய நாட்டத்தையும் எதிர்த்தார். ஆயினும் இவரது இலக்கிய ஆர்வம் தடைபடவில்லை. தந்தையின் கோபத்துக்கு ஆளாகாமல் இருக்க ‘பாப்லோ நெருடா’ என்ற புனைப்பெயரில் எழுதத் தொடங்கினார்.

எரிமலையும், கனமழையும், சுரங்கங்களும் சூழ்ந்த சிலி நாட்டின் தென் பகுதியில் ஓர் ஏழை இரயில்வே கூலிக்கு மகனாகப் பிறந்து, துன்பத்தில் வளர்ந்து, உலக நாடுகள் பலவற்றுள் சிலி நாட்டுத் தூதராகப் (Consul) பதவி வகித்து, உலகப் பெருங்கவிஞருள் ஒருவராக வளர்ந்து, நோபெல்பரிசு பெற்ற பெருங்கவிஞரே பாப்லோ நெருடா.

பாப்லோ நெருடா மார்க்சியத் தத்துவங்களில் ஈடுபாடு கொண்டிருந்தார். சிலியில் கம்யூனிஸ்ட் கட்சி சட்டவிரோதம் என அறிவிக்கப்பட்டது. இவரை கைது செய்ய வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது. நண்பர்கள்

# சிலி நாட்டைச் சிலிர்க்க வைத்த மா கவி

உதவியுடன் மாதக்கணக்கில் தலைமறைவாக இருந்தவர், பின்னர் அர்ஜென்டினாவுக்கு தப்பினார். 1971-ல் பாரீஸில் தூதராகப் பணியாற்றியபோது, இவருக்கு இலக்கியத் துக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கதே.

## யதார்த்த காதல் கவிதைகள்:

காதல், யதார்த்தம், அரசியல் என பல சிந்தனைகளை இவரது கவிதைகளை மையமாகக் கொண்டிருந்தன. கவிதைகளை பச்சை மையில்தான் எழுதுவார். ஆசை மற்றும் நம்பிக்கையின் சின்னம் பச்சை என்பது அவரது கருத்து.

கணியன் பூங்குன்றனாரின் ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ பாடல் வரிகளைப் போலவே அமைந்துள்ள ‘பூமியின் சருமம் உலகெங்கும் ஒன்றுதான்’ [The skin of the earth is same everywhere]’ என்ற இவரது கவிதை வரிகள் பிரபலமானவை. ‘20-ம் நூற்றாண்டின் மாபெரும் கவிஞர் என்று புகழப்பட்ட பாப்லோ நெருடா 69 வயதில் [1973] மறைந்தார்.


1924-லிருந்து 1934 வரை அவருடைய வாழ்க்கை ஒரே அலைக்கழிப்பாக இருந்தது. 1927-இல் பர்மாவிலும், 1928-இல் இலங்கையிலும், 1930-இல் ஜாவாடடேவியாவிலும், 1931-இல் சிங்கப்பூரிலும், 1933-இல் அர்ஜெண்டைனாவிலும் சிலிநாட்டுத் தூதுவராக [Consul]ப்பணி புரிந்தார். ஐந்தாண்டுகள் கிழக்காசிய நாடுகளில் வாழ்ந்த போது தனிமை அவரை மிகவும் வருத்தியது.

தாய்மொழியான ஸ்பானிஷ் மொழியை யாரிடமும் பேச வாய்ப்பில்லாமல் தவித்தார். தூதரக வருமானம் தம்மைக் கௌரவமாக வாழப் போதியதாக இருக்கவில்லை. அதனால் சில அவமதிப்புக்களுக்கும் ஆளாக வேண்டியிருந்தது. தாம் அப்போதிருந்த நிலையை விளக்கி ஒரு நண்பருக்கு எழுதிய கடிதத்தில் ‘தெருநாய்களின் துணையோடு வாழ்ந்தேன்’ என்று வருந்தி எழுதியிருக்கிறார்.

வியட்நாம் காடுகளில் சுற்றியலைந்ததைப் பற்றித் தமது பிற்காலக்கவிதை யொன்றில் குறிப்பிடும் போது என் வயதில் இருபதாண்டுகள் கூடிவிட்டன சாவை எதிர் நோக்கிக் காத்திருந்தேன் என் மொழிக்குள் நான் சுருங்கிக் கொண்டேன் என்று எழுதுகிறார்.

## இலங்கையில் தூதராக பணி

இலங்கையில் தூதராக இருந்தபோது, இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். நேருவைக் கண்டு பேசவிரும்பி டில்லி சென்றார். நேரு முதலில் சந்திக்க மறுத்து விட்டார். இரண்டாம் முறை நேருவைக் கண்டு பேசினார். ஆனால் நேரு அவரைக் கவர முடியவில்லை. தன் வரலாற்று நூலில் நேருவைப் பற்றியும், இந்திய நாட்டைப் பற்றிக் குறிப்பிடுகையில்



**அழகிய நிர்வாணப் புத்தர்கள்**
**மதுவிருந்தைப் பார்த்த வண்ணம்**
**திறந்த வெளியில்**
**வெறுமையாகச்**
**சிரித்துக் கொண்டிருக்கின்றனர்**
**கிழக்கில் சமயம்**
**என்று கசப்புணர்ச்சியோடு எழுதுகிறார்.**

1933-இல் அர்ஜெண்டைனாவில் தூதராக இருந்தபோது ஸ்பெயின் நாட்டின் தலைசிறந்த கவிஞரான லார்காவை போனஸ் அயர்லில் சந்தித்து நெருங்கிய நண்பரானார். அச்சந்திப்பைப்பற்றியும், அச்சந்திப்பின் தொடர்ச்சியான நிகழ்ச்சிகளைப்பற்றியும் கவிதை நடையில் நெருடா தன் வரலாற்று நூலில் கீழ்க்கண்டவாறு எழுதியுள்ளார்:

## அரசியல் கவிஞனாக உருவாக்கம்

ஸ்பெயினில் வகித்து வந்த தூதர் பதவி பறிபோனதும் நெருடா பாரிசில் [1937-39] சென்று தங்கினார். அப்போதுதான் அவருள்ளத்தில் அவரது சிறந்த படைப்பான சிலிப் பெருங்காப்பியம் உருப் பெற்றது. அதுவே பத்தாண்டுகள் கழித்துப் பதினைந்து பாகங்களைக் கொண்ட ‘பொதுக் காண்டமாக’ வெளிவந்தது.

இப் பத்து ஆண்டுகளில் பொதுவுடைமைக் கட்சியில் ஈடுபாடு கொண்டு தீவிர அரசியல் வாதியானார். 1940-லிருந்து 1943- வரை மூன்றாண்டுகள் மெக்சிகோவில் தூதராகப் பணிபுரிந்தார். அப்போது நாஜிகளால் தாக்கப் பட்டார். 1945-இல் பொதுவுடைமைக் கட்சி உறுப்பினராகப் போட்டியிட்டு சிலிப்பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.


1948- இல் சிலிநாட்டு ஜனாதிபதியாக இருந்த கான்சலஸ் விடெலா [Gonzaine Videia] பொதுவுடைமைக் கட்சியோடும் அக்கட்சி ஆட்சியிலிருந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடனும் தமக்கிருந்த உறவை முறித்துக் கொண்டது. ஜனாதிபதியின் இச்செயலை நெருடா வெளிப்படையாகக் கண்டித்தார். இதனால் சிலி அரசாங்கம் இவரைச் சிறை செய்ய முயன்ற போது, நெருடா தலைமறைவானார். பொதுவுடைமைக் கட்சித் தோழர்களின் வீடுகளில் மறைந்திருந்து, கடைசியில்

நாட்டைவிட்டு வெளியேறினார். அடுத்த நான்கு ஆண்டுகள் தென் அமெரிக்க நாடுகளிலும், ஐரோப்பாவிலும் நீண்ட பயணங்களை மேற்கொண்டார்.

அரசியல் நெருக்கடி மிக்க இப்போராட்டக் காலமே நெருடாவின் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க காலகட்டம், இயற்கையையும் காதலையும் பாடிக்கொண்டிருந்த நெருடா அரசியற் கவிஞனாக உருப்பெற்றார். அவருடைய கொள்கையில் மாற்றம் ஏற்பட்டது போல், கவிதைச் சிந்தனையிலும் மாற்றம் ஏற்பட்டது.

## உலக முன்னேற்ற கவிதைகள்

நெருடா தன் கவிதைகளைத் தூயவை, தூய்மையற்றவை (Pure and impure poetry) என்று இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கிறார். உலக முன்னேற்றத்தை நோக்கமாகக் கொண்டு பாடப்படும் கவிதைகளே



# சிலி நாட்டைச் சிலிர்க்க வைத்த மா கவி

தூய்மையானவை என்பது நெருடாவின் கருத்து. மாணவப் பருவத்தில் காதலை மையப்படுத்தித் தாம் எழுதிய முதல் இரண்டு கவிதைத் தொகுப்பையும் தூய்மையற்றவை என்று அவரே ஒதுக்கி விடுகிறார்.

நான் பெரியவன்; எண்ணற்றவற்றை உள்ளடக்கியவன் (I am large: I contain multitudes) என்ற விட்மனின் வரிகளுக்கு மிகப் பொருத்தமான எடுத்துக் காட்டாக விளங்கிய கவிஞர் பாப்லோ நெருடா.

பாப்லோ நெருடா இறப்பதற்குச் சில நாட்களுக்கு முன்பாகத் தன் கல்லறைப்பாட்டை (epitaph) 'ஒளியின் ஜீவன்' (Animal of Light) என்ற தலைப்பில் எழுதியிருக்கிறார். அப்பாடலின் வரிகளே.

*இன்று-*
*தான் இழந்த அந்தக்*
*காட்டின் ஆழத்தில்*
*அவன்-*
*எதிரிகளின்*
*காலடிச் சத்தத்தைக் கேட்கிறான்.*

*அவன்-*
*மற்றவர்களிடமிருந்து*
*ஓடவில்லை.*
*தன்னிடமிருந்து,*
*ஓயாத தன் பேச்சிலிருந்து*
*எப்போதும்-*





*தன்னைச் சூழ்ந்திருந்த*
*பாடற் குழுவிலிருந்து*
*வாழ்க்கையின்*
*உண்மையிலிருந்து*
*ஓடுகிறான்.*

*ஏனென்றால்*
*இம்முறை*
*இந்த ஒரேமுறை*
*ஓர் அசை*
*அல்லது*
*ஓர் மௌனத்தின் இடைவேளை*
*அல்லது*
*கட்டவிழ்க்கப்பட்ட அலையோசை*
*என் முகத்துக்கு நேராக*
*உண்மையை*
*வீசிவிட்டுச் செல்கிறது.*

*இனிமேல்*
*ஒன்றும் சொல்வதற்கில்லை*
*அவ்வளவு தான்!*
*காட்டின் கதவுகள்*

*மூடிக் கொண்டன.*
*இலைகளைத் தளிர்க்கச்செய்து*
*கதிரவன்*
*வட்டமிட்டுச் செல்கிறான்*

*நிலவு*
*வெண்கனியாகக்*
*காட்சியளிக்கிறது*
*மனிதன்*
*தவிர்த்த முடியாத*
*முடிவிற்குத்*
*தலை வணங்குகிறான்*

இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த கவிஞராக, உலக மொழிகள் எல்லாவற்றிலும் பாப்லோ நெருடாவின் கவிதைகள் வெளிவந்துள்ளன. இந்த நூற்றாண்டின் வரலாற்றுச் சிறப்புமிக்க மாபெரும் கவிஞராக பாப்லோ நெருடா மிளிர்கின்றார்.

**(உலக கவி பாப்லோ நெருடா மறைந்த செப்டம்பர் 23, நாள் நினைவாக இக்கட்டுரை பிரசுரமாகிறது)**







# திலீபனின் 35 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு ஊர்தி பவனியும் உண்ணாவிரதமும்





















# திலீபனின் தியாகத்தை போற்றி மக்கள் திரண்டு வந்து வணக்கம்





